بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 8

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

இதழ் 33

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரி 1445 - முஹர்ரம் 29★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1402 - ஸஹூர் 17 ★17 ஆகஸ்ட் 2023


## அல்லாஹ்வின் கட்டளை

وَالَّذِيۡنَ عَمِلُوا السَّيِّاٰتِ ثُمَّ تَابُوۡا مِنۡۢ بَعۡدِهَا وَاٰمَنُوۡۤا اِنَّ رَبَّكَ مِنۡۢ بَعۡدِهَا لَغَفُوۡرٌ رَّحِيۡمٌ ﴿۱۵۴﴾

**பொருள்**

தீய செயல்களைச் செய்து விட்டுப் பின்னர் (அவற்றிலிருந்து விலகிக்) கழிவிரக்கம் கொண்டு மேலும் நம்பிக்கை கொள்வார்களாயின், நிச்சயமாக உம் இறைவன் இதன் பின்னரும் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்.

(அல்அஃராப்: 154)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

اِنِّیۡ رَسُوۡلُ اللّٰہِ اِلَیۡکُمۡ جَمِیۡعَا - فَکِیۡدُوۡنِیۡ جَمِیۡعًا - سَیُہۡزَمُ الۡجَمۡعُ وَ یُوَلُّوۡنَ الدُّبُرَ

**என்பது மகத்துவ மிக்க வாதமாகும். இவை இறைவனின் நிழலின் கீழ் இறைத் தன்மையின் போர்வையால் போர்த்தப்பட்டிருந்த அந்த நபரின் வாயிலிருந்து வெளி வந்த சொற்களாகும்.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

நமது கண்ணியத்திற்குரிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணி எவ்வளவு உறுதி வாய்ந்த பணியாகும்! நான் ஒரு பணியை செய்வதற்காக தோன்றியுள்ளேன் என்று கூறிய அந்த நேரத்திலிருந்து இன்று நான் உமது மார்க்கத்தை முழுமை செய்துவிட்டேன் (5:4)) என்பதை கேட்டுவிடாத வரை அன்னார்(ஸல்) உலகிலிருந்து செல்லவில்லை.

اِنِّیۡ رَسُوۡلُ اللّٰہِ اِلَیۡکُمۡ جَمِیۡعَا

(நான் உங்கள் அனைவருக்கும் தூதராக வந்துள்ளேன். (7:159)) என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாதமாக இருந்தது. இந்த வாதத்தின் நிலைமைக்கு ஏற்ப ஒட்டு மொத்த உலகத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டப்படுவது அவசியமானதாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் தைரியத்துடனும், துணிவுடனும் எதிரிகளை விளித்து

فَکِیۡدُوۡنِیۡ جَمِیۡعًا

. (ஹூத்: 56) என்று கூறினார்கள். அதாவது, சதித்திட்டம் தீட்டுவதில் எந்தக் குறைவும் வைக்காதீர்கள். அனைத்து சதித்திட்டங்களையும், ஏமாற்று வேலைகளையும் செய்யுங்கள்; கொலை செய்வதற்கு சதித் திட்டம் தீட்டுங்கள்; நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கும், கைது செய்வதற்கும் திட்டம் தீட்டுங்கள். ஆனால் நினைவில் கொள்ளுங்கள்:..

سَیُہۡزَمُ الۡجَمۡعُ وَ یُوَلُّوۡنَ الدُّبُرَ

(அல்கமர் : 46) இறுதி வெற்றி என்னுடையதாகும் என்று கூறினார்கள். உங்களுடைய அனைத்து சதித் திட்டங்களும் மண்ணோடு மண்ணாகிவிடும். உங்களது அனைத்து கூட்டங்களும் பிளவுபட்டு சிதறுண்டு விடும். மேலும் புறுமுதுகு காட்டி ஓடி விடும். மேலும்,

اِنِّیۡ رَسُوۡلُ اللّٰہِ اِلَیۡکُمۡ جَمِیۡعَا

என்ற அந்த மகத்துவ மிக்க வாதத்தை வேறு எவரும் செய்யவில்லை. மேலும், எனக்கு எதிராக சதித் தீட்டம் தீட்டுவதில் எந்தக் குறைவும் வைக்காதீர்கள் என்று கூறுவதற்கு கூட எவருக்கும் துணிவு வரவில்லை. மேலும்,

سَیُہۡزَمُ الۡجَمۡعُ وَ یُوَلُّوۡنَ الدُّبُرَ

என்ற சொற்கள் இறைவனின் நிழலின் கீழ் இறைத் தன்மை எனும் போர்வையால் போர்த்தப்பட்டிருந்த நபரின் வாயிலிருந்து வெளிவந்த சொற்களாகும்.

(மல்ஃபூஸாத், தொகுதி, 2, பக்கம் 469, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

## நபிமொழி

**எந்த நபர் பொய் சத்தியத்தின் மூலமாக ஒருவருடைய செல்வத்தை அபகரித்துக் கொள்வாரோ அவர் அல்லாஹ்வை இந்த நிலையில் சந்திப்பார்.அதாவது அல்லாஹ் அவர் மீது கோபமாக இருக்கும் நிலையில் சந்திப்பார்.**

(2416-2417)ஹஸ்ரத் அப்துல்லாஹ் (பின் மஸ்ஊது) (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த நபர் சத்தியம் செய்கிறாரோ மேலும் அந்த சத்தியத்தில் அவர் பொய்யராக இருக்கின்றாரோ, மேலும் அவர் அந்த (பொய்) சத்தியத்தின் மூலமாக ஒரு முஸ்லிமினுடைய செல்வத்தை அபகரித்துக் கொள்கின்றார் என்றால் பின்னர் அல்லாஹ் அவர் மீது கோபமடைந்திருக்கும் நிலையில் அவர் அல்லாஹ்வை சந்திப்பார்.

அறிவிப்பாளர் கூறினார்: ஹஸ்ரத் அஷ்அஸ் (ரலி) கூறிவந்தார்கள்: இறைவன் மீது ஆணையாக! அன்னார் (ஸல்) எனது விவகாரம் குறித்தே இந்த விஷயத்தைக் கூறினார்கள்.(நடந்த சம்பவம் இதுவாகும்). எனக்கும், ஒரு யூதருக்கும் சொந்தமான ஒரு நிலம் இருந்தது. அதில் அவர் எனது உரிமையை நிராகரித்துவிட்டார்.நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் அந்த விவகாரத்தை முன் வைத்தேன். அப்போது இறைத் தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம், உம்மிடம் என்ன சாட்சியம் உள்ளது? என்று கேட்டார்கள். அதற்கு என்னிடம் (எதுவும்) இல்லை என்று நான் கூறினேன்.

ஹஸ்ரத் அஷ்அஸ் (ரலி) கூறிவந்தார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த யூதனிடம் சத்தியம் செய்யுங்கள் என்று கூறினார்கள். (ஹஸ்ரத் அஷ்அஸ் (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள்) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இவர் சத்தியம் செய்து விடுவார்; எனது செல்வம் பறிபோய் விடும் என்று நான் கூறினேன். அப்போது, எந்த மக்கள் அல்லாஹ்வுடன் செய்த உடன்படிக்கைகளையும், தமது சத்தியத்தியங்களையும் அற்ப விலைக்கு விற்று விடுகின்றனரோ என்ற இந்த வசனத்தை அல்லாஹ் இறக்கினான்.

(ஸஹீஹுல் புகாரி, தொகுதி 4, பாடம்- அல்குஸூமாத், காதியான் பதிப்பு 2008-ம் ஆண்டு)

* * * * *

## அல்லாஹ் எல்லா மனிதர்களுக்கும் கண்ணியம் வழங்கியுள்ளானே தவிர குறிப்பிட்ட சமுதாயங்களுக்கு அல்ல எனவே சமுதாயங்கள் ஒன்று மற்றொன்றின் மீது பெருமை கொள்ளக் கூடாது

وَلَقَدۡ كَرَّمۡنَا بَنِىۡۤ اٰدَمَ وَحَمَلۡنٰهُمۡ فِى الۡبَرِّ وَالۡبَحۡرِ وَرَزَقۡنٰهُمۡ مِّنَ الطَّيِّبٰتِ وَفَضَّلۡنٰهُمۡ عَلٰى كَثِيۡرٍ مِّمَّنۡ خَلَقۡنَا تَفۡضِيۡلًا ﴿۷۱﴾

(17:71)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்:

அல்லாஹ் எல்லா மனிதர்களுக்கும் கண்ணியம் வழங்கியுள்ளானே தவிர குறிப்பிட்ட சமுதாயங்களுக்கு அல்ல எனவே சமுதாயங்கள் ஒன்று மற்றொன்றின் மீது பெருமை கொள்ளக் கூடாது என்று இந்த வசனத்தில் அல்லாஹ் கூறியுள்ளான். நாங்கள் மற்றவர்களை விட மிகவும் கண்ணியத்திற்குரியவர்கள் என்று தங்களைத் தாங்களே கருதிக் கொண்ட யூதர்களுக்கும், குறைஷிகளுக்கும் இதன் மூலம் இறைவன் அறிவுரை செய்துள்ளான். மேலும், அல்லாஹ் எல்லா சமுதாயத்திற்கும் கண்ணியம் வழங்கியுள்ளான்; ஆனால், சில சமுதாயங்கள் இதிலிருந்து பயனடைவதில்லை ; மேலும் இறைவனால் திறக்கப்பட்டுள்ள வழிகளை தங்களுக்கு அவர்கள் அடைத்துக் கொள்கின்றனர் என்று இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது. وَحَمَلۡنٰهُمۡ فِى الۡبَرِّ என்று கூறி இந்த விஷயத்தின் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது: அதாவது, கடலையும், நிலத்தையும் ஒன்றாக மனிதனின் முன்னேற்றத்திற்காக அல்லாஹ் நிர்ணயித்துள்ளான். எனவே எந்த சமுதாயம் கண்ணியத்தை பெற விரும்புகின்றதோ அது சரிசமமாக இரண்டிலிருந்தும் பயனடைந்து கொள்ள வேண்டும்.

திருக்குர்ஆன் முஹம்மது (ஸல்) அவர்களால் உருவாக்கப்பட்டது என்று மக்கள் கூறுகின்றனர். (அப்படியென்றால்) இந்த இடத்தில் கூறப்பட்டுள்ள இந்த விஷயங்கள் ஓர் அரேபியாவில் வசிக்கக் கூடிய ஒரு நபரின் நாவிலிருந்து வெளிவர முடியுமா? அதிலும் குறிப்பாக படகில் ஒருபோதும் பயணம் கூட செய்திருக்காத நபரின் வாயிலிருந்து வெளிவர முடியுமா? வேதனை என்னவென்றால், கடந்த சில நூறு வருடங்களாக முஸ்லிம்கள் இந்த அறிவுரையை மறந்து

இதன் தொடர்ச்சி : 7ம் பக்கம்...

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போரின் நிலவரங்கள் & சம்பவங்கள் மற்றும் பத்ர் போர் ஷஹீதுகள் பற்றிய நற்குறிப்புகள்**
**ஹதீஸ் நூல்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில்**
**பத்ர் போர் சந்தர்பத்தில் வானவர்கள் இறங்கியதைக் குறித்த விளக்கங்கள்**

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூடாரத்திலிருந்து வெளியே வந்து இதை ஓதிக் கொண்டிருந்தார்கள்.**

سَيُهْزَمُ الْجَمْعُ وَيُوَلُّوْنَ الدُّبُرَ بَلِ السَّاعَةُ مَوْعِدُهُمْ وَالسَّاعَةُ أَدْهٰى وَأَمَرُّ

**பொருள்: அண்மையில் இவர்கள் அனைவரும் தோல்வியடைந்து விடுவார்கள். மேலும், புறமுதுகிட்டு ஓடுவார்கள். மேலும், இந்த நேரத்தைக் குறித்து தான் இவர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள். இந்த நேரம் மிகவும் கடினமானதும், மிகவும் கசப்பானதுமாகும்.**

**ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு ஃபிர்அவ்ன் இருக்கின்றான். இந்த சமுதாயத்தின் ஃபிர்அவ்ன் அபூஜஹ்ல் ஆவான் அல்லாஹ் அவனை மிகவும் மோசமான முறையில் கொன்றான். அஃப்ராவின் இரண்டு மகன்களும் வானவர்களும் அவனைக் கொலை செய்தனர். மேலும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் அவனது கதையை முடித்தார்கள்**
**பாலஸ்தீனத்தின் அநீதியிழைக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் சமுதாயத்திற்கும் பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யும்படி அறிவுறுத்தல்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 07 ஜுலை 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **வஃபா** மாதம் **07 ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த குத்பாவில் முஸ்லிம்களால் மக்கத்து காஃபிர்களுக்கு ஏற்பட்ட மதிப்பச்சம் பற்றி எடுத்துரைத்தவாறு போர் புரிவது பற்றி அபூஜஹ்லுக்கும் உத்பாவுக்கும் இடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடு பற்றி கூறப்பட்டிருந்தது. அதன் விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அபூஜஹ்ல் பரிகாசம் செய்ததனால் உத்பா போருக்கான அறிவிப்பும் செய்தான். இவ்வாறு முறையாக போர் ஆரம்பித்தது: உத்பா பின் ரபீஆ தன் சகோதரன் ஷேபா பின் ரபீஆ மற்றும் தன் மகன் வலீது பின் உத்பா ஆகிய இருவருக்கும் நடுவிலிருந்து வெளியேறி வரிசைகளை விட்டும் முன்னால் வந்து ஒற்றையாகப் போரிட அழைத்தான்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உத்பா பின் ரபீஆ முன்னால் வந்தான். அவனுடைய மகனும் அவனுடைய சகோதரனும் அவனுக்குப் பின்னால் வந்தார்கள். யார் தன்னுடன் ஒற்றையாகப் போட்டிக்கு வருவார்கள்? என்று அவன் கூவி அழைத்தான். சில அன்ஸாரி இளைஞர்கள் உத்பாவுக்கு பதில் அளித்தார்கள். நீங்கள் யார்? என்று அவன் கேட்டான். அந்த அன்ஸாரி ஸஹாபிகளிடம் நீங்கள் யார்? என்று உத்பா கேட்டான். அவர்கள் தாம் யார்? என்று அவனிடம் கூறினார்கள். பிறகு, எங்களுக்கு உங்களோடு எந்தக் கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றான். உத்வா அவர்களுக்கு இவ்வாறு பதில் அளித்தான்: அதாவது, எங்களின் சிறிய தந்தையின் மகன்களுடன் சண்டையிடுவது மட்டும் தான் எங்களுடைய எண்ணமாகும் நாங்கள் குறைஷியர்களுடன், மக்கத்தினருடன் சண்டையிட வேண்டும். அன்ஸாரி நபர்களுடன் அல்ல என்றான். அத்துடன் உரத்த குரலில் கூவி இவ்வாறு கூறினான்: முஹம்மதே! (ஸல்), எங்களுடைய உறவினர்களில் எங்களுக்கு சரிசமமான மக்களை எங்களுடன் மோத அனுப்புவீராக என்றான்.

அப்போது, ஹம்ஸாவே எழுவீராக! அலீயே எழுவீராக! ஹாரிஸின் மகனே எழுவீராக! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையார் ஆவார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மற்றும் உபைதா (ரலி) ஆகிய இருவரும் ஹுஸூர் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையின் உறவினர்கள் ஆவர்.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் உத்பாவை நோக்கி முன்னேறிச் சென்றார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஷேபாவை நோக்கிச் சென்றேன். ஹஸ்ரத் உபைதா (ரலி) அவர்களுக்கும் வலீதுக்கும் இடையில் மாற்றி, மாற்றி இரண்டு மோதல்கள் ஏற்பட்டன. இருவரும் ஒருவர் மற்றவரை காயப்படுத்தி பலவீனமாக்கி விட்டார்கள். பிறகு, நாங்கள் வலீது பக்கம் திரும்பினோம். அவனைக் கொன்று விட்டோம். உபைதாவை நாங்கள் தூக்கிக் கொண்டு வந்தோம்.

அவர்கள் இருவரும் அதாவது,ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் தம்முடைய எதிரிகளைக் கொன்று விட்டார்கள். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் தம் தோழர் ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் (ரலி) அவர்களைத் தமது படைக்குத் தூக்கிக் கொண்டு வந்த போது அவர்களின் கால் வெட்டப்பட்டிருந்தது.

அன்னாரை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன் கொண்டு வந்தபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் ஷஹீது இல்லையா? என்று அன்னார் பணிவுடன் கேட்டார்கள். அதற்கு, சந்தேகத்திற்கு இடமின்றி நீர் ஷஹீதுதான் என்று ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிறிய தந்தை வழி உறவினரான ஹஸ்ரத் உபைதா (ரலி) அவர்களால் அந்தக் காயங்களிலிருந்து உயிர் தப்ப முடியவில்லை. அவர்கள் பத்ர் போரிலிருந்து திரும்பி வரும்போது வழியில் மரணித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் (ரலி) அவர்கள் பற்றி ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: அவர்களின் கால் வாளால் வெட்டப்பட்ட பிறகு, அவர்களின் தோழர்கள் அவர்களைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள். அவர்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்ததும் அவர்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அருகில் படுக்க வைத்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய பாதத்தை அவர்களுக்குக் கீழ் வைத்து விட்டார்கள். தம் கால்களை அவர்களின் கால்களுக்குக் கீழ் வைத்து விட்டார்கள். ஹஸ்ரத் உபைதா (ரலி) அவர்கள் மிகவும் அன்போடு அன்னாரைப் பார்த்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஒருவேளை இன்று அபூ தாலிப் உயிரோடு இருந்திருந்தார் என்றால், அவரது கூற்றிற்கு அதிகம் உரிமையாளன் நான் என்பதை அவர் அறிந்திருப்பார் என்று பணிவுடன் கூறினார்கள். பிறகு, அபூ தாலிப் அவர்கள் கூறிய கவிதையைப் படித்தார்கள். அதன் பொருள் இதுவாகும்.

பைத்துல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மது (ஸல்) அவர்கள் விட்டுவிடப்படுவார்கள் என்று நீ பொய் கூறினாய். இப்போதோ நாங்கள் அவர்களைப் பாதுகாப்பதற்காக ஈட்டியையும் எறியவில்லை. அம்புகளையும் எறியவில்லை. நாங்கள் அவர்களை உன்னிடம் ஒப்படைத்து விடுவோம் என்று நீ பொய் கூறினாய். எங்களுடைய பிணங்கள் அவர்களுக்கு அக்கம் பக்கம் இருக்காத வரை நாங்கள் எங்களுடைய மகன்கள் மற்றும் மகள்களை விட்டும் கவனமற்றவர்களாக ஆகிவிடாத வரை (அவர்களை ஒன்றும் செய்ய முடியாது.)

இந்தக் கவி) தை (யை) க் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நீர் ஷஹீது ஆவீர் என்று நான் சாட்சி பகர்கின்றேன்! என்று கூறினார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் அபூ ஜஹ்ல் ஒரு துஆ செய்தான். அதைப் பற்றி இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது:

இரண்டு படைகளும் ஒன்றுடன் ஒன்று மோத ஆரம்பித்ததும், அதாவது கடுமையான போர் ஆரம்பித்ததும் அபூ ஜஹ்ல் இவ்வாறு துஆ செய்தான்: இறைவா! எங்களில் எவர் நெருங்கிய உறவுகளை முறிக்கிறாரோ, எவர் நாங்கள் இதற்கு முன் ஒருபோதும் கேட்டிராத

விஷயங்களைக் கூறுகிறாரோ இன்று அவரை அழித்து விடுவாயாக!

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு எழுதுகிறார்கள்:

பத்ர் யுத்தத்தின்போது அம்ர் பின் ஹிஷ்ஷாம் என்ற பெயருடைய ஒருவன் பிற்காலத்தில் அவனுடைய பெயர் அபூ ஜஹ்ல் என்று பிரசித்திப் பெற்றது. அவன் குறைஷிய நிராகரிப்பாளர்களில் தலைவனாகவும், முதல்வனாகவும் இருந்தான். அவன் இந்த சொற்களில் துஆ செய்தான்:

اَللّٰهُمَّ مَنْ كَانَ مِنَّا اَفْسَدَ فِي الْقَوْمِ وَاَقْطَعَ لِلرَّحِمِ فَاَحِنْهُ الْيَوْمَ

பொருள்: இறைவா! எங்கள் இருவரில் - அவன் இந்த சொற்களால் தன்னையும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களையும் பொருள் கொண்டான் - எவர் உன்னுடைய பார்வையில் ஒரு குழப்பவாதியாக இருக்கிறாரோ, சமுதாயத்தில் பிரிவினையை ஏற்படுத்துகிறாரோ, ஒருவர் மற்றவருடனான தொடர்புகளையும் சமுதாய உரிமைகளையும் துண்டித்து விட்டு உறவுகளை முறிப்பதற்குக் காரணமாகிறாரோ அவரை இன்று நீ அழித்து விடுவாயாக!

இந்த சொற்களில் அபூஜஹ்ல் கூற விரும்பியதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு குழப்பவாதி ஆவார்கள். சமுதாயத்தில் பிரிவினையை ஏற்படுத்தி அநியாயமாக குறைஷிகளின் மதத்தில் ஒரு பிரிவினையை உருவாக்குகிறார்கள். அவர்கள் எல்லா உரிமைகளையும் பறித்து விட்டார்கள். உறவுகளை முறிப்பதற்கு காரணமாகி விட்டார்கள் - நவூதுபில்லாஹ்! (அவ்வாறு கூறுவதிலிருந்து நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுகிறோம்.)

இதிலிருந்து தெரிய வருவதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வு பரிசுத்தமானதாகவும், தூயதாகவும் இருக்கவில்லை என்றே அபூ ஜஹ்ல் உறுதியாக நம்பினான். அதனால்தான் அவன் வேதனை மிகுந்த உள்ளத்தால் இவ்வாறு துஆ செய்தான். ஆனால், அந்த துஆவுக்குப் பிறகு அவன் ஒரு மணிநேரம் கூட உயிருடன் இருக்க முடியவில்லை.

இறைசீற்றம் அந்த இடத்திலேயே அவனுடைய தலையை வெட்டி வீசி விட்டது. எவர்களின் தூய வாழ்க்கை மீது அவன் கறையை வீசினானோ அவர்கள் அந்தக் களத்திலிருந்து வெற்றியும் உதவியும் கிடைக்கப் பெற்றவர்களாக திரும்பினார்கள்.

போர் நிலையைப் பற்றி ஓரிடத்தில் இவ்வாறு படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது: மும்முரமான போர்க் களத்தில் இரத்தம் சிந்த வைப்பதில் களம் சூடுபிடித்திருந்தது. முஸ்லிம்களுக்கு முன்னால் அவர்களை விட மும்மடங்கு கூட்டம் இருந்தது. அது எல்லா விதமான போர் தளவாடங்களை ஏந்திக் கொண்டு இஸ்லாத்தின் பெயரடையாளத்தை அழித்து விட வேண்டும் என்ற உறுதியுடன் போர்க் களத்துக்கு வந்திருந்தது.

முஸ்லிம்கள் பாவம்! எண்ணிக்கையில் குறைவானவர்களாக இருந்தார்கள். ஏழ்மையிலும், சொந்த ஊரை விட்டு வெளியேறிய துயரத்திலும் இருந்தார்கள். வெளிப்படையான வழிவகைகளைப் பொருத்த வரை மக்கத்தினருக்கு முன் சில நிமிடங்களில் இரையாகக் கூடியவர்களாக இருந்தார்கள். ஆனால், ஓரிறைக் கொள்கை மற்றும் தூதுத்துவத்தின் மீதான அன்பு அவர்களை கவலையற்றவர்களாக ஆக்கி வைத்திருந்தது. எதை விட அதிகம் ஆற்றல் பெற்றது எதுவும் உலகில் இல்லையோ அந்த பொருள், அதாவது உண்மையான ஈமான் அவர்களுக்கு ஓர் அசாதாரண ஆற்றலை நிரப்பி விட்டது.

அப்போது அவர்கள் மார்க்கத்திற்குத் தொண்டாற்றுவதற்கான எத்தகைய முன்மாதிரியைப் போர்க் களத்தில் காட்டிக் கொண்டிருந்தார்கள் என்றால், அதற்கு நிகர் கிடைப்பதில்லை. ஒவ்வொருவரும் மற்றவரை விட முந்தி அடியெடுத்து வைத்து வந்தார். இறை வழியில் உயிரைக் கொடுப்பதற்காக அமைதியிழந்து காணப்பட்டார். ஹஸ்ரத் ஹம்ஸா, அலீ மற்றும் ஸுபைர் (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோர் எதிரிகளின் வரிசைகளை சிதறடித்து விட்டார்கள்.

முஸ்லிம்களின் முதல் ஷஹீது பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் அடிமை ஹஸ்ரத் மஹ்ஜா (ரலி) அவர்கள் ஓர் அம்புக்கு இலக்காக ஆக்கப்பட்டார்கள். அதனால் அவர்கள் ஷஹீது ஆகிவிட்டார்கள். இவர்கள் முஸ்லிம்களில் ஷஹீதான முதல் நபர் ஆவார்கள்.

இதற்குப் பிறகு பனூ அதீ பின் நஜ்ஜார் எனும் கோத்திரத்தின் ஒரு நபர் ஹஸ்ரத் ஹாரிஸா பின் ஸுராக்கா ஷஹீது ஆனார்கள். இவர்கள் நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் அருந்திக் கொண்டிருந்தபோது, இவர்களை நோக்கி ஓர் அம்பு எறியப்பட்டது. அது இவர்களின் கழுத்தில் சென்று தைத்தது. இவ்வாறு இவர்கள் ஷஹாதத் தகுதியை அடைந்தார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஹாரிஸா (ரலி) பின் ஸுராக்கா பின் ஹாரிஸ் பத்ர் யுத்தத்தில் ஷஹீது ஆனார்கள். அப்போது அவர்கள் இளைஞராக இருந்தார்கள். அவர்களின் தாய் ரபீஆ பின்த் நஸ்ர் அவர்கள், ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களின் தந்தையின் சகோதரி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து எனது பார்வையில் ஹாரிஸாவுக்கு இருந்த தகுதியை தாங்கள் அறிவீர்கள். எனவே அவர் சொர்க்கத்தில் இருக்கிறார் என்றால் நான் பொறுமை காப்பேன். நற்கூலிக்கான நம்பிக்கை வைப்பேன். ஒருவேளை வேறு ஏதாவது விஷயம் என்றால் நான் என்ன செய்கிறேன் என்று தாங்கள் பார்ப்பீர்கள் என்று கூறினார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அந்தோ! உனக்கு என்ன பித்து பிடித்து விட்டதா? சொர்க்கம் ஒன்று மட்டும் தானா? ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சொர்க்கங்களோ ஏராளம் உள்ளன. உம் மகனோ ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸில் இருக்கிறார்.

இந்தப் போரில் காணக் கிடைத்த ஸஹாபிகளின் போர் உத்வேகம் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் இன்று பொறுமையுடன் நற்கூலியாக கருதி போர் புரிவாரோ, புறமுதுகிட்டு ஓடமாட்டாரோ இறைவன் அவரை சொர்க்கத்தில் நுழையச் செய்வான்.

இதைக் கேட்ட பனூ ஸலமா கோத்திரத்தைச் சேர்ந்த ஸுபைர் பின் ஹம்மாம் அவர்கள் - அப்போது அவர்களின் கையில் சில பேரீத்தம் பழங்களும் இருந்தன. அவர்கள் அவற்றை உண்டு கொண்டிருந்தார்கள். அவர்கள் இதைக் கேட்டதும் இவ்வாறு கூறினார்கள்: எனக்கும் சொர்க்கத்துக்கும் நடுவில் இந்த மக்கள் என்னைக் கொன்றுவிடுவதுதான் உள்ளதா?

பிறகு,தமது வாளை ஏந்திக் கொண்டு எந்த அளவு போர் புரிந்தார்கள் என்றால் ஷஹீது ஆகிவிட்டார்கள். அஃப்ராவின் மகன் அவ்ஃப் பின் ஹாரிஸ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! (ஸல்) அல்லாஹ் தன் அடியானின் எந்த விஷயத்தால் மகிழ்ச்சி அடைகின்றான்? என்று பணிவுடன் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், கவசம் போன்ற போர் ஆடைகள் இன்றி எதிரியைக் கொல்வதனால் என்று கூறினார்கள். இதனால் அவர்கள் தாம் அணிந்திருந்த கவசத்தைக் கழட்டி வீசிவிட்டார்கள். பல காஃபிர்களைக் கொன்ற பிறகு தாமும் ஷஹீது ஆகிவிட்டார்கள்.

அபூ ஜஹ்ல் கொல்லப்பட்டது பற்றி புகாரியில் வரும் அறிவிப்புக்கு ஏற்ப, ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் பத்ர் யுத்தம் அன்று வரிசையில் நின்று கொண்டிருந்தேன். நான் பார்வையைத் திருப்பி பார்த்தபோது எனது வலது பக்கமும் இடது பக்கமும் இரண்டு இள வயது இளைஞர்கள் நிற்பதைக் கண்டேன். அவர்கள் இருந்ததனால் நான் பாதுகாப்பாக இருப்பதாக உணரவில்லை.

இதற்குள் அவர்களில் ஒருவர் தன்னுடன் இருந்த மற்றொரு இளைஞனுக்குத் தெரியாமல் என்னிடம், சிறிய தந்தையாரே! எனக்கு அபூ ஜஹ்லைக் காட்டுங்கள் என்று கேட்டார். அதற்கு நான், என் சகோதரரின் மகனே! உனக்கு அவனிடம் என்ன வேலை உள்ளது? என்று கேட்டேன். அப்போது, நான் அவனைப் பார்த்தால் அவனைக் கொன்றுவிடுவேன். இல்லையென்றால், அவனுக்கு முன்னால் நான் இறந்து விடுவேன் என்று நான் அல்லாஹ்விடம் உறுதி எடுத்துள்ளேன் என்று அவன் கூறினார். பிறகு, மற்றோர் இளைஞர் தன்னுடன் இருந்த மற்றோர் இளைஞனுக்குத் தெரியாமல் என்னிடம் அதே போன்று கேட்டார்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருவேளை அவர்களுக்குப் பதிலாக நான் இரண்டு ஆண்களுக்கு நடுவில் இருந்திருந்தாலும் கூட எனக்கு ஒருபோதும் அவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்காது. அவர்களின் இந்த உணர்வு இருந்தும் (அப்துர் ரஹ்மான்) அவர்களுக்குத் திருப்தி ஏற்படவில்லை. பிறகும், இரண்டு வலுவான ஆண்கள் எனக்கு வலமும், இடமும் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நினைத்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அவர்கள் இருவருக்கும் அபூ ஜஹ்ல் பக்கம் கை காட்டி அவன் தான் என்று காண்பித்தேன். இதைக் கேட்டதுமே அவர்கள் இருவரும் பருந்துகளைப் போன்று அவன் மீது பாய்ந்து அவனைக் கொன்று விட்டார்கள். அவர்கள் இருவரும் அஃப்ராவின் மகன்கள் முஆஸ் மற்றும் முவ்விஸ் ஆவார்கள்.

ஹஸ்ரத் முஆஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அபுல் ஹகம் வரை யாரும் சென்றடைய முடியாது என்று மக்கள் பேசுவதைக் கேட்டேன். எனவே நான் கண்டிப்பாக அவன் மீது தாக்குதல் தொடுப்பேன் என்று உறுதி கொண்டு விட்டேன். நான் அவன் மீது பாய்ந்தேன். வாளின் ஒரு வீச்சால் அவனுடைய பாதங்களைக் கணுக்கால் வரை வெட்டி விட்டேன். அவன் மகன் இக்ரிமா என் தோள் மீது வாள் வீசினார். என் கைகளை வெட்டி விட்டார். வெறும் தோலுடைய ஆதரவில் அது எனது ஒருபக்கம் தொங்கிக் கொண்டிருந்தது. நாள் முழுவதும் நான் இவ்வாறே சண்டையிட்டுக் கொண்டிருந்தேன். வேதனை அதிகரித்ததும், நான் அதன் மீது காலை வைத்து அதை உடலில் இருந்து பிரித்து எடுத்து விட்டேன்.

போர் முடிந்ததும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொல்லப்பட்டவர்களுக்கு நடுவில் நன்றார்கள். அபூ ஜஹ்லைத் தேட ஆரம்பித்தார்கள். அன்னார் அவனைக் காணாததால் இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ لَا تُعْجِزْنِيْ فِرْعَوْنَ هٰذِهِ الْاُمَّةِ.

பொருள்: அல்லாஹ்வே! நீ என்னை இந்த சமுதாயத்தின் ஃபிர்அவ்னுக்கு எதிரில் தாழ்த்தி வைத்து விடாதே. அவன் தப்பி ஓடி விடக் கூடாது.

மக்கள் அவனைத் தேட ஆரம்பித்தார்கள். அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் அவனைத் தேடிக் கண்டு பிடித்து விட்டார்கள். ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இறைவா! அவன் உன் பிடியிலிருந்து தப்பி ஓடி விடக் கூடாது என்று துஆ செய்தார்கள்.

ஹுஸுர் (ஸல்) அவர்கள் அபூ ஜஹ்ல் உடைய சடலத்தைத் தேடுமாறு கட்டளையிட்டதும், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் கொலையுண்டவர்களில் தேடிய வண்ணம் அவனிடம் வந்தார்கள்.

ஹுஸுர் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்:

ஒருவேளை உங்களுக்கு அவனை அடையாளம் தெரியவில்லை என்றால், அவன் கால் முட்டியில் ஒரு காயம்பட்ட அடையாளம் இருக்கிறது. அதை வைத்து அவனை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். ஏனெனில், ஒரு முறை அப்துல்லாஹ் பின் ஜத்ஆன் வீட்டில் ஒரு விருந்தின்போது, நான் அவனை பலமாக தள்ளினேன். அவன், முட்டி தரையில் படும் வகையில் விழுந்தான். அவனுடைய கால் முட்டியில் காயம் பட்டுவிட்டது. அதற்கான அடையாளம் இப்போது வரை அவனுடைய கால் முட்டியில் இருக்கிறது.

இப்னு மஸ்ஊது கூறுகின்றார்கள்: அந்த அடையாளத்தை வைத்தே நான் அவனை அடையாளம் கண்டு கொண்டேன். அப்போது அவனுடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. நான் அவனுடைய கழுத்தில் காலை வைத்து விட்டேன். ஏனெனில், மக்காவில் அவன் எனக்கு மிகவும் தொல்லை கொடுத்திருந்தான்.

அல்லாஹ்வின் எதிரியே! அல்லாஹ் உன்னை எப்படி இழிவடையச் செய்துள்ளான் என்று பார்த்தாயா! என்று நான் கூறினேன். அவன் கூறினான்: எந்த விஷயம் என்னை இழிவுபடுத்தியது? ஒருவனை நீங்கள் கொன்றுவிட்டீர்கள். அதனால் என்ன ஆயிற்று? நீங்கள் இன்று வரை என்னை விட அதிகம் கண்ணியத்திற்குரியவனை, அந்தஸ்தை உடையவனை யாரையும் கொன்றிருக்கிறீர்களா? சரி, யார் வெற்றி பெற்றது? என்று சொல்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அபூ ஜஹ்ல் என்னிடம் தனது கடைசி நேரத்தில் நான் அவனுடைய கழுத்தில் காலை வைத்தபோது இவ்வாறு கூறினான்: ஆடுகளை மேய்ப்பவனே! இழிவான மேய்ப்பவனே! நீ ஏறக் கூடாத இடத்தில் ஏறிவிட்டாய்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பிறகு, நான் அவனுடைய தலையை வெட்டி விட்டேன். ஹுஸுர் (ஸல்) அவர்களுக்கு முன்னால் கொண்டு வந்து அன்னாருடைய காலடியில் போட்டு விட்டேன். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது அல்லாஹ்வின் எதிரி அபூ ஜஹ்ல் உடைய தலையாகும் என்று பணிவுடன் கூறினேன்.

ஹுஸுர் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள். மேலும், கூறினார்கள்:

اَللّٰهُ الَّذِیْ لَآ اِلٰهَ غَیْرُهٗ

அல்லாஹ் வையன்றி வணக்கத்திற்குரியவர் எவருமில்லை.

ஓர் அறிவிப்பில் இருந்து தெரிய வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் அபூ ஜஹ்லைக் கொன்ற பிறகு, அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அபூ ஜஹ்ல் கொல்லப்பட்டது பற்றி கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அன்னாருடன் நடந்து சென்றார்கள். மேலும், எவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் எவருமில்லையோ அந்த அல்லாஹ்வின் மீது ஆணையாக! என்று கூறினார்கள்.

அப்போது, எவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் எவரும் இல்லையோ அந்த அல்லாஹ்வின் மீது ஆணையாக! என்று நானும் கூறினேன். பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூ ஜஹ்ல் உடைய பிணத்திற்கு அருகில் நின்று கொண்டு இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் எதிரியே! உன்னை இழிவு படுத்திய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

ஹஸ்ரத் கத்தாதா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு ஃபிர்அவ்ன் இருப்பான். இந்த சமுதாயத்தின் ஃபிர்அவ்ன் அபூ ஜஹ்ல் ஆவான். அல்லாஹ் அவனை கொடூரமான முறையில் கொன்றான். அஃப்ராவின் இரண்டு மகன்களும், வானவர்களும் அவனைக் கொன்றார்கள். அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவனை முழுமையாக கொன்று விட்டார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அபூ ஜஹ்லை ஃபிர்அவ்ன் என்று கூறப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்த வரை அவன் ஃபிர்அவனை விடக் கொடியவன் ஆவான். ஃபிர்அவ்ன் கூட கடைசி வேளையில்

اٰمَنْتُ اَنَّهٗ لَآ اِلٰهَ اِلَّا الَّذِیْٓ اٰمَنَتْ بِهٖ بَنُوْٓا اِسْرَآءِیْلَ

என்று கூறினான். அதாவது, எவனைத் தவிர வணக்கத்திற்குரியவர் எவருமில்லையோ எவன் மீது இஸ்ரவேலர்கள் ஈமான் கொண்டுள்ளார்களோ அவன் மீது நான் ஈமான் கொள்கிறேன்.

ஆனால், இவனோ கடைசி வரை ஈமான் கொள்ளவில்லை. மக்காவில் எல்லாக் குழப்பத்தையும் இவன் தான் செய்தான். மிகவும் ஆணவம் கொண்டவனாகவும், சுயநலமுடையவனாகவும் மதிப்பு, மரியாதையை எதிர்பார்ப்பவனாகவும் இருந்தான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் போன்று தமது சமுதாயத்தின் உண்மையாளர்களுக்கு மிருகங்களிடமிருந்தும், கொலை வெறி கொண்டவர்களிடமிருந்தும் விடுதலை அளித்தார்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களைப் போன்று அவர்களை மக்காவில் இருந்து மதீனாவுக்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள். அந்த சமுதாயத்தின் ஃபிர்அவ்னாக இருந்த அபூ ஜஹ்லை பத்ர் போர்க் களத்தில் கொன்று விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

பத்ர் சந்தர்ப்பத்தில் மக்கத்து காஃபிர்கள் வந்தபோது, அவ்வளவுதான் இப்போது நாம் முஸ்லிம்களைக் கொன்று விட்டோம் என்று அவர்கள் நினைத்தார்கள். நாம் பெருநாள் கொண்டாடுவோம்; நன்றாக மது அருந்துவோம் என்று அபூ ஜஹ்ல் கூறினான். இப்போது முஸ்லிம்களைக் கொன்றுவிட்டுதான் பின்னால் செல்வோம் என்று அவன் நினைத்தான். ஆனால், அதே அபூ ஜஹ்லை மதீனாவின் இரண்டு இளைஞர்கள் - மக்கத்து காஃபிர்கள் மதீனா மக்களை மிகவும் இழிவாக கருதி வந்தார்கள். அவர்களை ஆராயேன் அதாவது வெறும் காய்கறிகளை விளைய வைக்கக் கூடியவர்கள்; விவசாயம் பார்ப்பவர்கள்; இவர்களுக்குப் போரைப் பற்றி என்ன தெரியும் என்று கூறி வந்தார்கள் - அந்த மக்கள் கொன்று விட்டார்கள்.

எவ்வாறு இருப்பினும், அந்த இளைஞர்கள் கொன்று விட்டார்கள். அவனுக்கு எப்படிப்பட்ட பரிதாபத்தைக் காண நேரிட்டது என்றால் அவனுடைய கடைசி ஆசை கூட நிறைவேற முடியவில்லை. அரேபியாவில் ஒரு வழக்கம் இருந்தது. ஒரு தலைவன் போரில் கொல்லப்படும் போது அவன் ஒரு தலைவன் என்று அடையாளம் காணப்படும் பொருட்டு அவனுடைய கழுத்து நீளமாக வைத்து வெட்டப்படுவதுண்டு.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் அவன் உணர்வின்றி அசைவின்றி காயமுற்று விழுந்திருப்பதைப் பார்த்தார்கள். உன் நிலை என்ன? என்று கேட்டார்கள். அதற்கு, எனக்கு வேறு எந்த வருத்தமும் இல்லை. என்னை மதீனாவின் இரண்டு விவசாயி இளைஞர்கள் கொன்று விட்டார்கள் என்பது மட்டும் தான் வருத்தம் என்று அவன் கூறினான். அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் உனக்கு ஏதாவது ஆசை இருக்கிறதா? என்று கேட்டார்கள். அதற்கு, இப்போது என்னுடைய ஆசை என்னவென்றால், என் கழுத்தை சற்று நீளமாக வைத்து வெட்டி விடு என்று அவன் கூறினான். நான் உன்னுடைய இந்த ஆசையையும் நிறைவேற விட மாட்டேன் என்று கூறி, அவன் கழுத்தை நாடிக்கு அருகிலிருந்து அன்னார் (ரலி) கடுமையாக வெட்டி விட்டார்கள். அவன் பெருநாள் கொண்டாட விரும்பிய அந்த நாளே அவனுக்கு இழவு நாளாக ஆகிவிட்டது. அவன் அருந்தியிருந்த மது செரிமானம் ஆவதற்குக் கூட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இணை வைப்பாளர்கள் மீது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தரப்பிலிருந்து கூழாங்கற்கள் வீசப்பட்ட சம்பவம் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஸஹீஹ் புகாரியில் உள்ளது. ஹுஸுர் (ஸல்) அவர்கள் கூடாரத்தில் துஆ செய்து கொண்டிருந்த போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருடைய கையைப் பிடித்துக் கொண்டார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! போதும் நிறுத்திக் கொள்ளுங்கள். தாங்கள் தங்கள் இறைவனிடம் மீண்டும், மீண்டும் துஆ கேட்டு விட்டீர்கள்! என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கவசம் அணிந்திருந்தார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூடாரத்திலிருந்து வெளியே வந்து இதை ஓதிக் கொண்டிருந்தார்கள்.

سَيُهْزَمُ الْجَمْعُ وَيُوَلُّوْنَ الدُّبُرَ بَلِ السَّاعَةُ مَوْعِدُهُمْ وَالسَّاعَةُ اَدْهٰى وَاَمَرُّ

பொருள்: அண்மையில் இவர்கள் அனைவரும் தோல்வியடைந்து விடுவார்கள். மேலும், புறமுதுகிட்டு ஓடுவார்கள். மேலும், இந்த நேரத்தைக் குறித்து தான் இவர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள். இந்த நேரம் மிகவும் கடினமானதும், மிகவும் கசப்பானதுமாகும்.

இதன் விளக்கத்தில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன்னபிய்யீனில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: முஹாஜிர்கள் என்ன! அன்ஸார் ஸஹாபிகள் என்ன! எல்லா முஸ்லிம்களும் முழு பலத்துடனும் ஆர்வாரத்துடனும், தூய்மையுடனும் போரிட்டார்கள். ஆனால், எதிரியின் பெரும் எண்ணிக்கையும் அவனுடைய ஆயுதங்களின் மிகுதியும் எதையும் நடக்க விடவில்லை. ஒரு நேரம் வரை முடிவு ஐயத்திற்குரியதாக இருந்தது.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொடர்ந்து துஆ செய்வதிலும் வேண்டிக் கேட்பதிலும் மூழ்கியிருந்தார்கள். அன்னாருடைய மன்றாடல் ஒவ்வொரு நொடிக்கும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. ஆனால், கடைசியில் ஒரு மிக நீண்ட நேரத்திற்குப் பிறகு அன்னார் ஸஜ்தாவில் இருந்து எழுந்தார்கள். மேலும்,

سَيُهْزَمُ الْجَمْعُ وَيُوَلُّوْنَ الدُّبُرَ

என்ற இறைவனின் நற்செய்தியை கூறியவாறு கூடாரத்தில் இருந்து வெளியே வந்தார்கள்.

وَمَا رَمَيْتَ اِذْ رَمَيْتَ وَلٰكِنَّ اللّٰهَ رَمٰى

என்ற சூரா அன்ஃபாலின் வசனத்திற்கு இமாம் ஸாரீ அவர்கள் விளக்கவுரையை எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்: குறைஷிகள் தாக்குதல் தொடுத்த போது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்:

அல்லாஹ்வே! இந்தக் குறைஷிய கோத்திரம் தன்னுடைய குதிரைகளுடனும் கர்வமான பொருள்களுடனும் உன்னுடைய தூதரைப் பொய்ப்பிக்கும் வகையில் வந்துள்ளார்கள். பொய்ப்படுத்துகிறார்கள். அல்லாஹ்வே! நீ என்னிடம் வாக்குறுதியளித்த அந்த விஷயத்தை நான் உன்னிடம் கேட்கிறேன்.

அப்போது ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் இறங்கினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உள்ளங்கை நிறைய மணலை எடுத்து அந்தக் காஃபிர்கள் பக்கம் வீசுங்கள் என்று அவர்கள் கூறினார்கள். பிறகு, இரண்டு படைகளும் ஒன்றோடு ஒன்று மோதின.

அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: பள்ளத்தாக்கின் கூழாங்கற்களால் நிரம்பிய உள்ளங்கை அளவு மணலை என்னிடம் கொடுப்பீராக! அதை அன்னார் அந்தக் காஃபிர்களின் முகங்களை நோக்கி எறிந்து விட்டார்கள். ஷாஹத்தில் வுஜூஹ் அதாவது, முகங்கள் கெடட்டும் என்று கூறினார்கள். இணை வைப்பாளர்கள் தங்களுடைய கண்களை கசக்க ஆரம்பித்து விட்டார்கள். அதனால் அவர்கள் தோல்வியைத் தழுவினர்.

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَا رَمَيْتَ اِذْ رَمَيْتَ وَلٰكِنَّ اللّٰهَ رَمٰى

அதாவது, கூழாங்கற்கள் நிறைந்த மணலை நீர் எறிந்தபோது உண்மையில் நீர் அதை எறியவில்லை. ஏனென்றால், நீர் எறிந்திருந்தால் (அதனால்) ஒரு மனிதன் எறிவதனால் ஏற்படும் அளவுக்கே தாக்கம் ஏற்பட்டிருக்கும். மாறாக, அல்லாஹ் அதை எறிந்தான். அதன் விளைவாக அந்த மணலின் துகள்கள் அவர்களின் கண்கள் வரை சென்றடைந்து விட்டன. (8: 18)

ஆக, இந்த மணலை எறிந்த செயல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலம் வெளிப்பட்டது. ஆனால், அதன் தாக்கம் அல்லாஹ்விடமிருந்து வெளிப்பட்டது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்தப் போர்க் களத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்: கூடாரத்தில் இருந்து வெளியே வந்து, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நாலாப்புறமும் சுற்றி பார்த்தார்கள். அப்போது இரத்தம் சிந்த வைப்பதில் சூடுபிடித்திருந்த களத்தைப் பார்த்தார்கள். அப்போது அன்னார் மணலையும், கூழாங்கற்களையும் ஒரு உள்ளங்கை அளவு எடுத்தார்கள். அதை நிராகரிப்பாளர்கள் பக்கம் வீசிவிட்டு உத்வேகத்துடன் இவ்வாறு கூறினார்கள்:

ஷாஹத்தில் வுஜூஹ் அதாவது, எதிரியின் முகங்கள் சீர்கெட்டன. அத்துடன் அன்னார் முஸ்லிம்களைப் பார்த்து உரத்த குரலில், திடீர் தாக்குதல் நடத்துங்கள் என்று கூறினார்கள். முஸ்லிம்களின் காதுகளில் தம் அன்பிற்குரிய எஜமானரின் குரல் சென்றடைந்தது. அவர்கள் தக்பீர் முழக்கமிட்டு ஒரேயடியாக தாக்குதல் தொடுத்து விட்டார்கள்.

மறுபுறம் அன்னார் (ஸல்) உள்ளங்கை அளவு மணலை எறிந்ததும், எத்தகைய சூறாவளியின் சீற்றம் ஏற்பட்டது என்றால் காஃபிர்களின் கண், வாய், மூக்கு எல்லாம் மணலாலும் கூழாங்கற்களாலும் நிரம்ப ஆரம்பித்து விட்டது. அன்னார் (ஸல்) கூறினார்கள்: இது இறைவனின் வானவர்களின் படையாகும். அது நமக்கு உதவ வந்துள்ளது. பிறிதோர் அறிவிப்பில் வருகிறது: அப்போது சில மக்களுக்கு இந்த வானவர்கள் தென்படவும் செய்தார்கள்.

எவ்வாறு இருப்பினும், உத்பா, ஷேபா மற்றும் அபூ ஜஹ்ல் போன்ற குறைஷிய தலைவர்களோ மண்ணோடு மண்ணாகி விட்டிருந்தார்கள். முஸ்லிம்களின் இந்த திடீர் தாக்குதல் மற்றும் திடீரென்று வந்த சூறாவளியின் சீற்றத்தின் விளைவால் குறைஷிகளின் கால்கள் ஆட்டங்காண ஆரம்பித்தன. விரைவாகவே காஃபிர்களின் படை ஓட்டம் பிடித்தது. சிறிது நேரத்தில் களம் காலியாகி விட்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: (இறை) சந்திப்பில் இருக்கும் இந்தப் படித்தரத்தில் சிலவேளை மனிதனிடமிருந்து எப்படிப்பட்ட செயல்கள் வெளிப்படுகின்றன என்றால், அவை மனித ஆற்றலுக்கு அப்பாற்ப்பட்டவயைாகத் தென்படும். இறை வல்லமையின் பண்பைத் தன்னிடம் கொண்டிருக்கும்.

உதாரணமாக, நம் எஜமானரும் தலைவரும் தூதர்களின் தலைவருமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் யுத்தத்தில் கூழாங்கற்கள் நிறைந்த மணலை காஃபிர்கள் மீது எறிந்தார்கள். எந்த ஒரு துஆவின் விளைவாகவும் அல்லாமல், மாறாக, சுயமே தமது ஆன்மிக ஆற்றலால் அந்த மணலை எறிந்தார்கள். ஆனால், அந்த மணல் இறை வல்லமையைக் காட்டியது. எதிரிகளின் படை மீது அதன் தாக்கம் எந்த அளவு வழக்கத்திற்கு மாற்றமானதாக வெளிப்பட்டது என்றால், அவர்களில் எவரும் அதன் தாக்கம் தன் கண்களில் ஏற்படாதவராக இருக்கவில்லை.

அவர்கள் அனைவரும் குருடர்களைப் போன்று ஆகிவிட்டார்கள். அவர்களிடம் எந்த அளவு கலக்கமும் கவலையும் உருவாகியது என்றால், புத்தி பேதலித்தவர்களைப் போன்று ஓட ஆரம்பித்து விட்டார்கள். இந்த அற்புதத்தின் பக்கமே மேன்மை பொருந்திய அல்லாஹ் இந்த வசனத்தில் கூறுகின்றான்:

அதாவது, நீர் அந்த உள்ளங்கை நிறைய (மணலை) எறிந்த போது, நீர் எறியவில்லை. மாறாக, அல்லாஹ் அதை எறிந்தான். அதாவது, திரை மறைவில் இறை ஆற்றல் செயலாற்றி விட்டது. இது மனித சக்திக்கு உட்பட்ட பணியாக இருக்கவில்லை.

எவ்வாறு இருப்பினும், சிறிது நேரத்தில் இணை வைப்பாளர்களிடம் தோல்வி மற்றும் மன குழப்பத்தின் தடயங்கள் தென்பட ஆரம்பித்து விட்டன. முஸ்லிம்களின் முழு வலுவான தாக்குதலால் அவர்களின் வரிசைகள் சிதறிப் போய் விட்டன. அவர்கள் ஓட்டம் காண ஆரம்பித்தனர். முஸ்லிம்கள் அவர்களை விரட்டிச் சென்றார்கள். அவர்களை பகிரங்கமாக தோற்கடித்தார்கள்.

ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் காஃபிர்களுக்கு எதிராக கொண்டிருந்த கடுமையான உணர்வு பற்றி குறிப்பு இவ்வாறு வருகிறது: கடைசியில் எதிரிகள் தோல்வியடைந்து ஆயுதங்களைக் கீழே போட்டதும், ஸஹாபிகள் அவர்களை சிறைபிடிக்கத் துவங்கியதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களின் முகத்தில் இந்தக் காட்சியால், விருப்பமின்மையைக் கண்டார்கள். அதாவது, முஸ்லிம்கள் செய்த இந்த செயலை அன்னார் விரும்பாத வகையில் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களிடம், ஸஃதே! நீர் சமுதாயத்தின் இந்த செயலை, அதாவது இணை வைப்பாளர்களை சிறை பிடிப்பதை விரும்பவில்லை போல? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இணை வைப்பாளர்களுடன் இது நம்முடைய முதல் மற்றும் வெற்றிகரமான போராகும். எனவே, என்னுடைய பார்வையில் இதில் இணை வைப்பாளர்களை உயிருடன் வைப்பதற்கு பதிலாக அதிகமதிகமாக கொன்று விடுவது சிறந்ததாகும் என்று கூறினார்கள். அன்னார் கூறுகிறார்கள்: எனக்கு சிறைபிடிப்பது பிடிக்கவில்லை. இவர்கள் அனைவரையும் கொன்று விட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

பத்ர் யுத்தத்தில் வானவர்கள் இறங்கியது பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

اِذْ تَسْتَغِيْثُوْنَ رَبَّكُمْ فَاسْتَجَابَ لَكُمْ

اَنِّيْ مُمِدُّكُمْ بِاَلْفٍ مِّنَ الْمَلٰٓئِكَةِ مُرْدِفِيْنَ

பொருள்: நீர் உம் இறைவனிடம் மன்றாடிக் கொண்டிருந்தபோது, நிச்சயமாக நான் அணி அணியான ஆயிரம் வானவர்களைக் கொண்டு உமக்கு உதவி புரிவேன் என்ற வாக்குறுதியுடன் அவன் உமது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டான்.(8: 10)

பத்ர் யுத்தத்தில் வானவர்கள் இறங்கியதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் சான்றளித்துள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் யுத்தம் அன்று கூறினார்கள்:

இவர்கள் ஜிப்ரீல் ஆவார்கள். இவர்கள் தம்முடைய குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துள்ளார்கள். மேலும், போர் ஆயுதங்களை ஏந்தியுள்ளார்கள்.

ஸீரத் இப்னு ஹிஷ்ஷாமில் பல்வேறு ஸஹாபிகளின் அறிவிப்புகள் பத்ர் யுத்தம் அன்று வானவர்கள் இறங்கியதற்கு சான்று பகர்கின்றன. இவை பற்றி ஸஹாபிகளின் பல அறிவிப்புகள் உள்ளன.

ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். தாங்கள் முஸ்லிம்களில் பத்ரில் கலந்து கொண்டவர்களுக்கு என்ன அந்தஸ்தை அளிக்கிறீர்கள்? என்று கேட்டார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்: சிறந்த முஸ்லிம்கள் அல்லது இதேபோன்று வேறு ஏதோ ஒரு சொல்லைக் கூறினார்கள். ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) கூறினார்கள்: இதேபோன்று பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்ட வானவர்களும் சிறந்தவர்கள் ஆவார்கள்.

ஒரு வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் இந்த அறிவிப்பையும் எழுதியுள்ளார்: ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹூ அன்ஹூமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பனீ ஃகப்பார் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவன் என்னிடம் கூறினான்: நானும் என் சிறிய தந்தை வழி சகோதரனும் என நாங்கள் இருவரும் வந்தோம். ஒரு மலையில் ஏறிவிட்டோம். அங்கிருந்து பத்ர் யுத்தக் களம் தென்பட்டது. நாங்கள் இணை வைப்பாளர்களாக இருந்தோம். போரில் யாருக்கு பேரிழப்பு ஏற்படுகிறது என்றும் போர்ச் செல்வங்களை எடுத்துக் கொள்பவர்களுடன் சேர்ந்து நாமும் எடுத்துக் கொள்ளலாம் என்றும் காத்திருந்தோம்.

ஆக, நாங்கள் மலை மீது இருக்கும்போதே மேகத்தின் ஒரு துண்டு எங்களுக்கு அருகில் வந்தது. நாங்கள் அதிலிருந்து குதிரைகள் கனைக்கும் சத்தத்தைக் கேட்டோம். கூறுபவர் இவ்வாறு கூறுவதை நான் கேட்டேன்: ஹைஸம், முன்னோக்கி செல்லுங்கள். என் சிறிய தந்தை வழி சகோதரனுக்கோ இந்த இதயத்தின் திரை கிழிந்து விட்டது. அவன் இந்தக் குரலைக் கேட்டு அங்கேயே மரணித்து விட்டான். மற்றபடி, நானும் அழிவுக்கு அருகில் சென்று விட்டேன். பிறகு, நான் என்னை சுதாரித்துக் கொண்டேன்.

அப்போது காஃபிராக இருந்த ஸுஹைல் பின் அம்ர் கூறுகிறார்கள்: நான் பத்ர் யுத்தம் அன்று கருப்பு வெள்ளைப் புள்ளிகளைக் கொண்ட குதிரைகளில் வெள்ளையான மக்களைப் பார்த்தேன். அவர்கள் விண்ணுக்கும் மண்ணுக்கும் நடுவில் இருந்தார்கள். குறைஷிகளின் மக்களைக் கொன்று கொண்டிருந்தார்கள்; சிறைபிடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆக, பத்ர் யுத்தத்தில் வானவர்களை முஸ்லிம்கள் மட்டுமே கண்டிருக்கவில்லை. அதையும் தாண்டி, காஃபிர்களும் கண்டு வந்தார்கள். பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டிருந்த அபூ உஸைது மாலிக் பின் ரபீஆ அவர்களின் குறிப்பு வருகிறது. இது அவர்களின் பார்வை சென்ற பிறகுள்ள நிகழ்வாகும். சம்பவத்தைக் கூறிய அந்த நேரத்தில் கூறுகிறார்கள்: இன்று நான் பத்ர் யுத்தக் களத்தில் இருந்தால், எனக்கு பார்வையும் இருந்தால் நான் உங்களுக்கு (இதை அவர்கள் கூறிக் கொண்டிருக்கும் போது அவர்களின் பார்வை சென்று விட்டிருந்தது. ஆனால் பத்ர் யுத்தத்தில் நடந்த சம்பவத்தைப் பற்றி எனக்குப் பார்வை இருந்தபோது பத்ரில் நானே இதைப் பார்த்தேன் என்று கூறுகிறார்கள்)

எனக்கு (இப்போது) பார்வை இருந்தால் நான் உங்களுக்கு வானவர்கள் வெளிப்பட்ட அந்தக் கணவாயையும் காட்டியிருப்பேன். அதில் எனக்கு எவ்வித ஐயமோ, சந்தேகமோ இல்லை.

அபூ தாவூத் மஃஸனீ அவர்கள் அறிவிக்கிறார்கள்: இவர்கள் பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டிருந்தார்கள். இவர்கள் கூறுகிறார்கள்: நான் பத்ர் யுத்தம் அன்று ஓர் இணை வைப்பாளனை அவன் மீது வாள் வீசுவதற்காகத் துரத்திச் சென்றேன். திடீரென்று நான் பார்த்தது என்னவென்றால், என்னுடைய வாள் அவன் வரை சென்றடைவதற்கு முன்பு அவனுடைய தலை வெட்டப்பட்டு விழுந்து விட்டது. அவனை என்னை அன்றி வேறு யாரோ

கொன்றுள்ளார்கள் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பத்ர் யுத்தம் அன்று வானவர்களின் அடையாளம் வெள்ளை நிறத் தலைப்பாகையாக இருந்தது. அவற்றின் கூடுதல் துணியை அவர்கள் தம்முடைய முதுகுக்குப் பின்னால் தொங்க விட்டிருந்தார்கள். ஹுனைன் போர் அன்று செந்நிற தலைப் பாகை அவர்களின் அடையாளமாக இருந்தது.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: தலைப்பாகைகள் அரேபியர்களின் மகுடங்கள் ஆகும். பத்ர் யுத்தம் அன்று வானவர்களின் அடையாளமாக வெள்ளை நிற தலைப்பாகை இருந்தது. அவற்றை அவர்கள் தம்முடைய முதுகில் தொங்க விட்டிருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களின் தலையில் மஞ்சள் நிற தலைப்பாகை இருந்தது.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹூ அன்ஹூமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: வானவர்கள் பத்ர் தவிர வேறு எந்தப் போரிலும் யாரையும் கொல்லவில்லை. அவர்கள் மற்ற போர்களில் எண்ணிக்கையையும் உதவியையும் அதிகரிப்பதற்காக கலந்து கொண்டு வந்தார்கள். யாரையும் கொல்லவில்லை.

இது ஸீரத் இப்னு ஹிஷ்ஷாமின் அறிவிப்பு ஆகும்.

வானவர்கள் இறங்கியது, நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்தியாகவும் அவர்களின் மன திருப்திக்காகவும் இருந்தது; இல்லையென்றால் வானவர்கள் போரில் செயல்ரீதியாக பங்கெடுக்கவில்லை என்பது சிலரது கருத்தாகும். இந்த சிந்தனையும் சில ஸஹீஹான ஹதீஸ்களுக்கு எதிரானவையாகும். ஸஹீஹான அறிவிப்பில் இருந்து வானவர்கள் செயல் ரீதியாக போரில் கலந்து கொண்டார்கள் என்பது நிரூபணமாகிறது.

எனினும், இங்கு உதவி செய்வதற்கு ஒரே ஒரு வானவர் போதுமே பிறகு ஆயிரக்கணக்கான வானவர்கள் ஏன் இறங்கினார்கள்? என்ற விவகாரம் எழுகிறது.

இமாம் இப்னு கஸீர் அவர்கள் ஸஹீஹைனில் (புகாரி மற்றும் முஸ்லிமில்) உள்ள, போர்க் காலகட்டத்தில் வானவர்கள் இறங்கிய ஹதீஸ்களை எடுத்து எழுதிய பிறகு, இவ்வாறு எழுதுகிறார்கள்:

அல்லாஹ்விடமிருந்து வானவர்களின் இறங்குதல் மற்றும் முஸ்லிம்களுக்கு அதைப் பற்றிய தகவல் தெரிவித்தல் ஆகியவை நற்செய்தி வடிவில் இருந்தன. இல்லையென்றால், அல்லாஹ்வால் அது அல்லாமலும் தன்னுடைய எதிரிகளுக்கு எதிராக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உதவி செய்திருக்க முடியும்.

எனவேதான் அவன் இவ்வாறு கூறியுள்ளான்: உதவி அல்லாஹ்விடமிருந்து மட்டுமே வருகிறது. சூரா முஹம்மதில் இவ்வாறு கூறியுள்ளான்: அல்லாஹ் நாடியிருந்தால் தானே அந்தக் காஃபிர்களிடம் பழி தீர்த்திருப்பான். ஆனால், அவன் (உங்களை) சோதிக்கின்றான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

பத்ர் யுத்தத்தில் அல்லாஹ் மேகங்களுக்கு இடையில் இருந்தே தன் முகத்தை வெளிப்படுத்தினான். அதாவது, போர் இன்னும் துவங்கியிருக்கவில்லை. அதற்குள் மழை பொழிந்து விட்டது. அதனால் காஃபிர்களுக்கு கடுமையான இழப்பும், முஃமின்களுக்கு போர் அடிப்படையில் மாபெரும் பலனும் கிடைத்தது.

பிறகு, முஃமின்களுக்கு உதவி செய்வதற்காகவும், காஃபிர்கள் மீது மதிப்பச்சத்தை ஏற்படுத்துவதற்காகவும் வானவர்களும் உள்ளங்களில் இறங்கினார்கள். இன்னும் சொல்வதாயின், பத்ர் யுத்தத்தில் பல நிராகரிப்பாளர்கள் வானவர்களைத் தம்முடைய கண்களால் கண்டார்கள். மேலும், விவகாரம் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்பதன் கீழ் தலைவர்கள் தேடித் தேடி கொல்லப்பட்டார்கள்.

இவ்வாறே தஃப்ஸீரே ஸகீரில் சூரா ஆலி இம்ரானில் 127வது வசனத்தின் கீழ் விளக்கமான குறிப்பு எழுதியுள்ளார்கள். அதில் கூறப்பட்டுள்ளது: கனவு அல்லது ஆன்மிகக் காட்சியில் நற்செய்தி கிடைப்பதால் மனிதனின் தைரியம் அதிகரிக்கின்றது என்பதற்காகவே வானவர்களைப் பற்றி குறிப்பிடப்படுகிறது. இல்லையென்றால் அல்லாஹ் உதவி புரிவான் என்பதே அசல் நோக்கமாக இருந்தது.

எவ்வாறு இருப்பினும், இது ஓர் ஆன்மிக வடிவைக் கொண்டதாக இருந்தது. அது ஓர் உண்மையான நிலையாக இருந்தது. அதை நம் மக்களும் அந்நியர்களும் கண்டார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது தொடர்பாக கூறுகின்றார்கள். இது அன்னார் (அலை) இயற்றிய நூல் அத்தப்லீஃக் ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் என்பதில் உள்ளது. அதில் அரபியில் கூறப்பட்டுள்ளது.

அரபு மக்கள் சிலவேளை தாங்கள் பெரிய மேற்கோளை வாசிக்கும்போது எங்களுக்கு மொழியாக்கம் செய்ய கஷ்டமாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். எனவே நான் அரபு வாசகத்தையும் படிக்க முயற்சி செய்கிறேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

وَقَدْ جَرَتْ عَادَتُهُ وَسُنَّتُهُ أَنَّهُ يَخْتَارُ الْإِخْفَاءَ

وَالْكَتْمَ فِيْ وَاقِعَاتٍ قَضَتْ حِكْمَتُهُ إِخْفَاءَهَا

وَيَخْلُقُ الْأَهْوَاءَ فَتَحْشُرُ الْآرَاءُ إِلَى جِهَاتٍ أُخْرٰى

وَإِذَا أَرَادَ إِخْفَاءَ صُوْرَةِ نَفْسِ وَاقِعَةٍ فَرُبَّمَا يُرٰى

فِيْ تِلْكَ الْمَوَاضِعِ الْوَاقِعَةَ الْكَبِيْرَةَ صَغِيْرَةً مَهُوْنَةً

وَالْوَاقِعَةَ الصَّغِيْرَةَ الْمَسْنُوْنَةَ كَبِيْرَةً نَادِرَةً

وَالْوَاقِعَةَ الْمُبَشَّرَةَ مُخَوَّفَةً وَالْوَاقِعَةَ الْمُخَوَّفَةَ مُبَشَّرَةً

فَهٰذِهٖ أَرْبَعَةُ أَقْسَامٍ مِنَ الْوَاقِعَاتِ مِنْ سُنَنِ اللّٰهِ كَمَا مَضٰى.

أَمَّا الْوَاقِعَةُ الْكَبِيْرَةُ الْعَظِيْمَةُ الَّتِيْ أَرَادَ اللّٰهُ أَنْ

يُّرِيَهَا صَغِيْرَةً حَقِيْرَةً فَنَظِيْرُهَا فِي الْقُرْآنِ

وَاقِعَةُ بَدْرٍ لِمَنْ يَتَدَبَّرُ وَيَرٰى.

فَإِنَّ اللّٰهَ قَلَّلَ أَعْدَاءَ الْإِسْلَامِ بِبَدْرٍ فِيْ مَنَامِ رَسُوْلِهٖ لِيُذْهِبَ

الرَّوْعَ عَنْ قُلُوْبِ الْمُسْلِمِيْنَ

وَيَقْضِيَ مَا أَرَادَ مِنَ الْقَضَاءِ.

(அத்தப்லீஃக், ரூஹானீ கஸாயீன் தொகுதி 5, பக்கம் 447 - 449)

இதன் மொழியாக்கம் இவ்வாறாகும்: அவனுடைய இந்த வழக்கமும், நடைமுறையும் எப்பொழுதும் இருந்து வருகிறது. அவன் அந்த சம்பவங்களை மறைத்து இரகசியமாக வைக்கிறான். அவற்றின் நுட்பம் அவனுடைய .....என்றால், அல்லாஹ்வுடைய இந்த வழக்கமும், நடைமுறையும் எப்பொழுதும் இருந்து வருகிறது. எந்த சம்பவங்கள் மறைந்து இருக்க வேண்டும் என்பதை நுட்பஞானம் எதிர்பார்க்கிறதோ அவற்றை அவன் மறைத்து இரகசியமாக வைக்கின்றான். மக்களின் ஆசைகளும், கருத்துகளும் அசல் உண்மைக்கு எதிராக இருக்கும்.

சில நேரங்களில் அவன் அந்தப் பெரிய நிகழ்வை ஒரு சிறிய சாதாரண நிகழ்வாகக் காட்டுகின்றான். சிறிய சம்பவத்தை பெரிய, அரிய நிகழ்வாக எடுத்துரைக்கின்றான். நற்செய்தி வழங்கக் கூடிய நிகழ்வை அச்சுறுத்தும் நிகழ்வாகவும் அச்சுறுத்தும் நிகழ்வை நற்செய்தி வழங்கக் கூடிய நிகழ்வாகவும் காட்டுகின்றான். இவை நிகழ்வுகளின் நான்கு வகைகளாகும். அவை அல்லாஹ்வின் நடைமுறைக்கு ஏற்ப தொடர்கின்றன.

எந்த மகத்துமிக்க, மாபெரும் நிகழ்வை அல்லாஹ் சிறியதாக அற்பமானதாக காட்ட விரும்பினானோ அந்த நிகழ்வு பத்ர் யுத்தத்தின் நிகழ்வாகும். எவர் ஆழ்ந்த சிந்தனையை வெளிப்படுத்தவும், கண்களைத் திறக்கவும் விரும்புகிறாரோ அவருக்காக (காட்டுகின்றான்).

எனவே அல்லாஹ் பத்ர் சந்தர்ப்பத்தில் தன் தூதர் (ஸல்) அவர்களின் கனவில் இஸ்லாத்தின் எதிரிகளைக் குறைவாக ஆக்கிக் காட்டினான். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கனவில் இஸ்லாத்தின் எதிரிகளைக் குறைவாக ஆக்கிக் காட்டினான். முஸ்லிம்களின் உள்ளத்திலிருந்து அவர்கள் மீதான அச்சம் அகன்று விட வேண்டும் என்பதற்காகவும், அல்லாஹ் தான் நாடுவது நிறைவேற வேண்டும் என்பதற்காகவும் அவன் இவ்வாறு செய்தான். மேலும், அல்லாஹ் பெரியதாகவும் அரியதாகவும் ஆக்கிக் காட்ட விரும்பிய அந்த நிகழ்வுக்கான உதாரணம் திருக்குர்ஆனில் வானவர்களின் உதவியின் நற்செய்தி பற்றிய சம்பவம் ஆகும். நம்பிக்கை கொண்டவர்களின் உள்ளம் குளிர வேண்டும் என்பதற்காகவும் போரில் அவர்களுக்கு எந்த அச்சமும் இருக்கக் கூடாது என்பதற்காகவும் இவ்வாறு செய்தான்.

எனவே அல்லாஹ் திருக்குர்ஆனில் நம்பிக்கை கொண்டவர்களிடம் வாக்குறுதி அளித்தான்.

மேலும், அவன் ஐயாயிரம் வானவர்களைக் கொண்டு அவர்களுக்கு உதவி செய்வான் என்று அவர்களுக்கு நற்செய்தி வழங்கினான். அவர்களுக்கு நற்செய்தியாக அமைய வேண்டும் என்பதற்காக இந்த எண்ணிக்கையை அதிகரித்துக் காட்டினான்.

இல்லையென்றால், வானவர்களில் ஒரு வானவரே தன் இறைவனின் கட்டளையால் பூமியைப் புரட்டிப் போடும் வல்லமை கொண்டுள்ளார். அதற்காக ஐயாயிரம் என்ன! ஐந்து வானவர்கள் கூட தேவையில்லை. ஆனால், அல்லாஹ் அவர்களுக்கு மகத்துவ மிக்க வெற்றியை வழங்க நினைத்தான். எனவே, அவன் உதவி செய்பவர்களின் பெரும்பான்மையை வெளிப்படுத்தக் கூடிய அந்த சொல்லைப் பயன்படுத்தினான். மேலும் இதையே நாடினான்.

பிறகு, அவன் பத்ர் வெற்றிக்குப் பிறகு நம்பிக்கை கொண்டவர்களுக்கு இதைத் தெரிவித்தான்: வானவர்களின் எண்ணிக்கை வெளிப்படையான சொற்களுக்குப் பொருந்தக் கூடியதாக இருக்கவில்லை ; மாறாக, அது அதற்கு விளக்கமாக இருந்தது. அதை உயர்ந்தவனும், மேலானவனும் ஆன அல்லாஹ்வே நன்கறிவான். அல்லாஹ் தான் வழங்கும்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

நற்செய்தியின் மூலமாக அவர்களுடைய உள்ளங்கள் நிம்மதியடைய வேண்டும் என்பதற்காகவும், அவர்களை நல்லெண்ணத்திலும், நம்பிக்கையிலும் அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்பதற்காகவுமே இவ்வாறு செய்தான்.

இணை வைப்பாளர்களின் தோல்வி பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: சிறிது நேரத்திற்குப் பிறகு, இணை வைப்பாளர்களின் படையில் தோல்வி மற்றும் மனக் குழப்பம் ஆகியவற்றின் தடயங்கள் தென்பட்டன. முஸ்லிம்களின் வலுவான தாக்குதலால் அவர்களுடைய வரிசைகள் சிதறிப் போக ஆரம்பித்தன. போர் தனது முடிவை நெருங்கியது. முன்னரும் கூறப்பட்டது போன்று பிறகு, இணை வைப்பாளர்களின் படைகள் வரிசை மாறி பின்னுக்கு சென்றன. அவர்கள் ஓட்டம் பிடித்தனர். முஸ்லிம்கள் வெட்டிக் கொன்றவாறும் பிடித்துக் கட்டியவாறும் அவர்களை விரட்டிச் சென்றார்கள். எதுவரை என்றால், (காஃபிர்களான) அவர்கள் முழுமையான முறையில் தோல்வியைத் தழுவினார்கள்.

பிறகு, ஓரிடத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இந்தப் போர் இணை வைப்பாளர்களின் தெளிவான தோல்வியிலும் முஸ்லிம்களின் பகிரங்கமான வெற்றியிலும் சென்று முடிந்தது. அதில் 14 முஸ்லிம்கள் ஷஹீது ஆனார்கள். முஹாஜிர்களில் ஆறு பேர். அன்ஸாரி ஸஹாபிகளில் எட்டு பேர். ஆனால், இணை வைப்பாளர்கள் பெரிய இழப்பைக் காண நேரிட்டது. அவர்களின் 70 பேர் கொல்லப்பட்டனர். 70 பேர் சிறைபிடிக்கப்பட்டனர். அவர்கள் பெரும்பாலும் வழிநடத்துபவர்களாகவும் தலைவர்களாகவும் பெரும் பெரும் கண்ணியத்திற்குரியவர்களாக கருதப்பட்டவர்களாகவும் இருந்தார்கள்.

பதர் யுத்தத்தில் ஷஹீதான ஸஹாபிகள் இவர்கள் ஆவர். முன்னரே கூறப்பட்டது போன்று மொத்தம் 14 முஸ்லிம்கள் ஷஹீது ஆனார்கள். அவர்களில் ஆறுபேர் முஹாஜிர்களைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். எட்டு பேர் அன்ஸாரி ஸஹாபிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

முஹாஜிர்களில் ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் பின் முத்தலிப், உமைர் பின் அபீ வகாஸ், ஸுஷ் ஷிமாலைன், அதாவது உமைர் பின் அம்ர், ஆகில் பின் புகைர், மஹ்ஜா மௌலா உமர் பின் கத்தாப், ஸஃப்வான் பின் பைஸா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) ஆகியோர் ஆவார்கள். மேலும், அன்ஸாரி ஸஹாபிகளில் ஸஃது பின் ஹாரிஸ், உமைர் பின் ஹம்மாம், ராஃபி பின் முஅல்லா மற்றும் ஹாரிஸ் பின் ஸுராக்கா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) ஆகியோர் ஆவார்கள்.

இணை வைப்பாளர்களில் கொல்லப்பட்டவர்கள் என்று பார்க்கும்போது எழுபது இணை வைப்பாளர்கள் அழிந்தார்கள். அதிகப்படியாக குறைஷிய தலைவர்கள் இருந்தார்கள். சில முக்கியமான மற்றும் பெயர் போன கொலையுண்டவர்களின் பெயர்கள் இவையாகும்:

ஹன்ஸா பின் அபீ ஸுஃப்யான், ஹாரிஸ் பின் ஹஸ்ரமீ, அஹ்மர் பின் ஹஸ்ரமீ, உபைது பின் ஸயீது பின் ஆஸ், ஆஸ் பின் ஸயீது ஆஸ், உக்பா பின் இப்னு முஈத், உத்பா பின் ரபீஆ, ஷேபா பின் ரபீஆ, வலீது பின் உத்பா பின் ரபீஆ, ஹாரிஸ் பின் ஆமிர் அபுல் பக்தரீ, ஆஸ் பின் ஹிஷ்ஷாம், நஸ்ர் பின் ஹாரிஸ், ஆஸ்பின் ஹிஷ்ஷாம், அபுல் ஆஸ் பின் கைஸ், உமையா பின் - ஆஸ் பின் ஹிஷ்ஷாமின் பெயர் இரண்டு முறை வந்துள்ளது. அல்லது இவர்கள் இரண்டு பேர் ஆவார்கள். அபுல் ஆஸ் பின் கைஸ், உமையா பின் கலஃப், அபூ ஜஹ்ல், அவன் பெயர் அம்ர் பின் ஹிஷ்ஷாம் ஆகும்.

இவர்களில் பெரும்பாலார் மக்காவில் முஸ்லிம்களுக்கும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும் துன்பமிழைத்தவர்கள் ஆவர்.

இது தொடர்பாக மற்ற விஷயங்களை இனி எடுத்துரைப்போன். இன்ஷாஅல்லாஹ்.

சில துஆக்களின் பக்கமும் கவனமூட்ட விரும்புகிறேன். பாலஸ்தீனத்தின் முஸ்லிம்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு எளிமையை ஏற்படுத்துவானாக! அநீதிக்குள்ளாக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்வானாக அவர்களுக்கு அவர்களுடைய உரிமையை வழங்கக் கூடிய அவர்களை சரியாக வழி நடத்தக்கூடிய, அவர்களை அநீதிகளிலிருந்து வெளிக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்யக் கூடிய தலைவர்களை வழிகாட்டிகளை வழங்குவானாக!

இப்போது அவர்கள் மிகவும் அதிகமாக அநீதிக்குள்ளான நிலையில் இருக்கிறார்கள். அவர்களை சீர்தூக்குபவரும் அவர்களுக்கு வழிகாட்டுபவரும் எவருமில்லை என்று தோன்றுகிறது. முஸ்லிம்கள் ஒன்றுபட்டால், இந்த இன்னல்களில் இருந்து வெளிவர முடியும்.

இதே போன்று ஸ்வீடனிலும் மற்ற சில நாடுகளிலும் கருத்து சுதந்திரம், மத சுதந்திரம் என்ற பெயரில் தவறான வேலைகளை செய்பவர்களுக்கு சுதந்திரம் கிடைத்துள்ளது; முழு சுதந்திரம் கிடைத்துள்ளது. இதை சாக்குப்போக்காக வைத்துக் கொண்டு முஸ்லிம்களின் உணர்வுகளோடு விளையாடி எத்தகைய சில நடவடிக்கைகளை அன்றாடம் மேற்கொள்கிறார்கள் என்றால் அவை முஸ்லிம்களின் உணர்வுகளைப் புண்படுத்தக்கூடியவையாகும். மிகவும் அருவருப்பான செயல்களாகும்.

திருக்குர்ஆனை அவமதிப்பது அல்லது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பற்றி மோசமான சொற்களை சொல்வது ஆகியவற்றை செய்கிறார்கள். அல்லாஹ்வே இவர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக!

இதிலும் முஸ்லிம் அரசாங்கங்களின் தவறு உள்ளது. அவர்களிடம் உள்ள பிரிவினை காரணமாக இஸ்லாத்திற்கு எதிரான ஆற்றல்கள் இது போன்ற தவறான செயல்களை செய்கின்றன. முஸ்லிம்கள் தரப்பிலிருந்து ஏதாவது எதிர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும் அது தற்காலிகமானதாக இருக்கும். அதுவும், எந்தத் தாக்கமும் அற்றதாக இருக்கும். எனவே, முஸ்லிம் வழிகாட்டிகளுக்காகவும் முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் அதிகம் துஆக்கள் செய்யுங்கள். அதற்கான அதிக தேவையுள்ளது.

பிறகு, ஃபிரான்ஸின் நிலை உள்ளது. அங்கும் முஸ்லிம்கள் இலக்காக்கப்படுகிறார்கள். முஸ்லிம்களும், மற்றவர்களும் சேர்ந்து செய்யும் எதிர் நடவடிக்கையும் தவறானது. உடைத்து நொறுக்குவதால் ஒன்றும் கிடைக்காது. முஸ்லிம்கள் தங்களது செயலை இஸ்லாமிய போதனைக்கு ஏற்ப ஆக்கிக் கொள்ள வேண்டும். முஸ்லிம்களின் சொல்லும் செயலும் இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப இருக்கும் போதுதான் வெற்றிகளும் கிடைக்கும்.

எவ்வாறு இருப்பினும், நாம் துஆதான் செய்ய முடியும். குறிப்பாக, இஸ்லாமிய உலகிற்காகவும், பொதுவாக முழு உலகிற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் ஒவ்வொருவரையும் அநீதியிலிருந்து பாதுகாத்து வைப்பானாக! உலகில் அமைதி மற்றும் சமாதான சூழலும் உருவாகி விடட்டுமாக! எல்லாரும் ஒருவர் மற்றவரின் உரிமையை நிறைவேற்றுவதற்கான முக்கியத்துவத்தைப் புரியக் கூடியவர்களாக ஆகட்டுமாக!

இல்லையென்றால், உலகம் எந்தப் பக்கம் சென்று கொண்டிருக்கிறதோ - நான் பலமுறை கூறிவிட்டேன். மிகப் பெரிய அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. அல்லாஹ் கருணை புரிவானாக!

இதேபோன்று பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகளுக்காகவும் அதிகம் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களையும் எல்லாத் தீங்குகளிலிருந்தும் பாதுகாத்து வைப்பானாக!

சொல்வதற்கு என்னவோ, ஃபிரான்ஸில் மிகப் பெரும் விஷயங்களை வெளிப்படுத்துகிறார்கள். கொல்லப்பட்ட சிறுவனுக்கு ஆதரவாக பல விஷயங்கள் நடப்பதாகப் புரியப்படுகிறது. ஆனால், செயல் ரீதியாக அங்குள்ள பொது மக்களின் தோரணை எப்படி இருக்கிறது என்றால், அவர்கள் பிடிக்கப்பட்ட அந்த போலீஸ்காரருக்காகவும், கொல்லப்பட்ட அந்த சிறுவனுக்காகவும் என இருவருக்காகவும் நிதி திரட்டினார்கள். சிறுவனுக்காக திரட்டப்பட்ட நிதியில் வெறும் 2 லட்சம் யூரோக்கள் மட்டுமே சேர்ந்துள்ளன. மேலும், அந்த போலீஸ் காரருக்காக - அவருக்கு எதிராக நாங்கள் நடவடிக்கையும் எடுப்போம் என்று கூறுகிறார்கள். அரசாங்கமும் அறிக்கை விடுகிறது. அவருக்கு சாதகமாக அவருக்காக, அவருக்கு உதவுவதற்காக ஒரு மில்லியனுக்கும் அதிகமான யூரோக்கள் ஒன்று சேர்ந்து விட்டன.

அல்லாஹ் கருணை புரிவானாக! இந்த மக்களுக்கு நீதியுடன் நடப்பதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக! முஸ்லிம்களுக்கு ஒன்றுபடுவதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக!

தமிழாக்கம்:
மவ்லவி: அத்தாவுல் முஃக்னீ

* * * * *

## தஃப்ஸீரே கபீர் (1ம் பக்கம் தொடர்ச்சி...)

விட்டனர். மேலும் அவர்களின் வலிமை குன்றி விட்டது. அவர்கள் கடல் துறை முகங்களை கருத்தில் கொண்டிருந்தால் பின்னர் இஸ்லாம் தற்போது எந்த அளவிற்கு பலவீனமாக உள்ளதோ அந்த அளவிற்கு ஒருபோதும் பலவீனம் அடைந்திருக்காது.

وَفَضَّلْنٰهُمْ عَلٰى كَثِيْرٍ مِّمَّنْ خَلَقْنَا تَفْضِيْلًا

என்ற வசனத்திலிருந்து இவ்வாறு சில மக்கள் பொருள் கொள்கின்றனர். அதாவது, மனிதன் சில வகையான படைப்பினங்களிலிருந்து உயர்ந்தவன் ஆவான். எனினும், எல்லா வகையான படைப்பினங்களிலிருந்தும் உயர்ந்தவன் கிடையாது. ஆனால் இது தவறான விளக்கம் ஆகும். ஏனெனில், இந்த இடத்தில் பனீ ஆதமை பற்றிய குறிப்பு என்பது ஜமாஅத் என்ற ரீதியிலானது ஆகும். அனைத்து மனிதர்களும் அனைத்து படைப்பினங்களை விடவும் உயர்ந்தவர்கள் கிடையாது என்பதில் என்ன ஐயம் இருக்க முடியும்? மனிதர்களில் சிலரோ மிகவும் அசுத்தமானவர்களும் இருக்கின்றனர். மேலும் விலங்குகளை விடவும் மிகவும் கீழானவர்களும் உள்ளனர் என்பதிலும் ஐயமில்லை. சிலர் விலங்குகளை விடவும் உயர்வானவர்களாக இருக்கின்றனர். மிகவும் நல்லவர்கள் சிலர் இருக்கின்றனர். மேலும், சாதாரண வானவர்களை விடவும் உயர்ந்தவர்கள் சிலர் இருக்கின்றனர். சிலரோ மிக உன்னதமான அந்தஸ்தில் இருக்கின்றனர். மிக சிறந்த வானவர்களை விடவும் உயர்வானவர்கள் சிலர் இருக்கின்றனர்.

சுருக்கமாக, எல்லா மனிதர்களும் எல்லா படைப்பினங்களை விடவும் உயர்ந்தவர்கள் கிடையாது. மாறாக, சில மனிதர்கள் அனைத்து படைப்பினங்களை விடவும் உயர்வானவர்களாக இருக்கின்றனர். மனிதன் மனிதன் என்ற அடிப்படையில் பெரும்பாலான படைப்பினத்தைக் காட்டிலும் சிறந்தவன் ஆவான். ஏனெனில், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், குதிரைகள், காளைகள், ஆடுகள் ஆகிய இவை அனைத்தும் நிராகரிப்பாளர் மற்றும் நம்பிக்கையாளர் அனைவருக்குமே பயனளித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் அனைவருக்கும் சேவை செய்வதில் ஈடுபட்டிருக்கின்றன. எனவே மனிதன் இனம் என்ற அடிப்படையில் படைப்பினத்தைக் காட்டிலும் உயர்ந்தவன் ஆவான். மேலும், முழுமையான மனிதன் என்ற நிலையில் மனிதன் அனைத்து படைப்பினங்களை விடவும் உயர்ந்தவன் ஆவான்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 365, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * *

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போருக்கான தயாரிப்புகள் மேலும் கண்ணியத்திற்குரிய ஸஹாபிகள் தமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த உத்வேகம் மிக்க நேசம் மற்றும் பத்ர் போர் சந்தர்ப்பத்தின் போது ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்கள் செய்த உருக்கமான துஆக்கள்**

**அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எதிரி முன்னால் இருக்கின்றான். இங்கிருந்து தப்பித்து செல்வோமா? மாட்டோமா? என்பது தெரியாது. எனவே ஷஹீது ஆகுவதற்கு முன்பு தங்களின் அருளுக்குரிய உடலை எனது உடல் தொட வேண்டும் என்று நான் விரும்பினேன் என்று கூறி விநோதமான முறையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான நேசத்தை ஸவாத் பின் கஸிய்யா அவர்கள் வெளிப்படுத்தினார்கள்**

**பத்ர் போரின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில மக்களை கொலை செய்வதை தடுத்திருந்தார்கள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 2023-**ஜுன் 30 அதாவது ஹிஜ்ரீ ஷம்ஸி 1402 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் 30-**ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி ......**

போர் நடக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிலரைக் கொல்வதைவிட்டு தடுத்தும் இருந்தார்கள். இது தொடர்பாக வருகிறது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் நாளன்று தம் ஸஹாபிகளிடம் கூறினார்கள்: பனூ ஹாஷிம் மற்றும் சில மக்கள் நிர்பந்தத்தினால் குறைஷியர்களுடன் வந்துள்ளதாகவும் மகிழ்ச்சியுடன் வரவில்லை என்பதும், அவர்கள் நம்முடன் போர் புரிய விரும்பவில்லை என்பதும் எனக்குத் தெரிய வந்தது. எனவே உங்களில் எவர் ஒருவர் பனூ ஹாஷிமின் மனிதர் எவரையும் சந்திக்கின்றாரோ அவர் அவரைக் கொல்ல வேண்டாம். எவர் அபுல்பக்தரீயை சந்திக்கிறாரோ அவர் அவரைக் கொல்ல வேண்டாம். எவர் அப்துல் முத்தலிபின் மகன் அப்பாஸை (இவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர் ஆவார்கள்) அவரை சந்திக்கிறாரோ அவர் அவரையும் கொல்ல வேண்டாம். ஏனெனில், இந்த மக்கள் நிர்பந்தத்திற்கு ஆளாகி குறைஷியர்களுடன் வந்துள்ளார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூஹுஸைஃபா பின் உத்பா (ரலி) அவர்கள் கூறினார்கள்: நாங்கள் எங்களுடைய தந்தையர்கள், மகன்கள், சகோதரர்கள் மற்றும் உறவினர்களை கொல்ல வேண்டும்; ஆனால், அப்பாஸை விட்டு விட வேண்டுமா? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அவரை அதாவது, அப்பாஸை சந்தித்தால் நான் வாளால் கண்டிப்பாக அவரைக் கொன்று விடுவேன்.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்கள்: இந்த செய்தி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை எட்டிய போது அன்னார் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: அபூ ஹஃபஸே!

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூஹஃபஸ் என்ற என்னுடைய புனைப் பெயரை வைத்து என்னை அழைத்தது அதுவே முதல் முறையாகும். ஹுஸூர் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் தூதரின் சிறிய தந்தையார் மீது வாள் வீசப்படுமா? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எனக்கு அனுமதியளித்தால் நான் வாளால் அவருடைய தலையை அதாவது, நயவஞ்சகத்தை வெளிப்படுத்திய அபூ ஹுஸைஃபாவின் தலையை சீவி விடுகிறேன் என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர், அதாவது, அபூஹுஸைஃபா நயவஞ்சகத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்று (ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள்) பணிவுடன் கூறினார்கள். ஹஸ்ரத் அபூஹுஸைஃபா (ரலி) அவர்கள் பிற்காலத்தில் இவ்வாறு கூறி வந்தார்கள்: நான் அன்று கூறிய அந்த சொல் காரணமாக நான் நிம்மதியாக இருக்கவில்லை. நான் ஷஹீதாவது இதற்கு ஈடேற்றமாக ஆவரை தவிர (வேறு வழியில்லை என்று) நான் எப்பொழுதும் இந்த விஷயத்தால் அஞ்சிக் கொண்டே இருந்தேன்.

ஆக, ஹஸ்ரத் அபூஹுஸைஃபா (ரலி) அவர்கள் யமாமா போர் அன்று ஷஹீத் ஆகிவிட்டார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் இதன் விளக்கத்தைப் பற்றியே இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளைப் பார்த்து இதையும் கூறினார்கள்: நிராகரிப்பாளர்களின் படையில் எத்தகைய சிலரும் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் தமது மன மகிழ்ச்சியுடன் இந்தப் போர்த் திட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. மாறாக, குறைஷிய தலைவர்களின் அழுத்தம் காரணமாக கலந்து கொண்டார்கள். இல்லையெனில் அவர்கள் மனதால் நம்முடைய எதிரிகள் அல்ல.

அதேபோன்று எப்படிப்பட்ட சிலரும் இந்தப் படையில் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் மக்காவில் நம்முடைய கஷ்டகாலத்தில் நம்முடன் கண்ணியமாக நடந்து கொண்டார்கள். மக்காவில் அவர்கள் முஸ்லிம்களுடன் நடந்து கொண்ட அவர்களின் அந்த ஒழுக்கம் காரணமாக அவர்களின் நன்மைக்குக் கைமாறு செய்வது நமது கடமையாகும். எனவே, இப்படிப்பட்ட எவர் மீதாவது எவராவது ஒரு முஸ்லிம் மேலோங்கி விட்டால் அவருக்கு எவ்வித துன்பமும் தரக் கூடாது.

ஹுஸூர் (ஸல்) அவர்கள் குறிப்பாக, முதல் வகையில் அப்பாஸ் பின் அப்தில் முத்தலிப் அவர்கள் மற்றும் இரண்டாவது வகையில் அபுல்பக்தரீயின் பெயரைக் கூறினார்கள். அவர்களைக் கொல்வதை விட்டும் தடுத்தார்கள். ஏனெனில், இந்த மக்கள் முஸ்லிம்களின் துயர் துடைக்க முயற்சி செய்து வந்தார்கள். எனவே தடுத்தார்கள். ஆனால் தவிர்க்க முடியாத நிலைமையால் அபுல்பக்தரீயால் கொல்லப்படுவதிலிருந்து தப்ப முடியவில்லை. ஆனால், அவர் மரணிப்பதற்கு முன்பு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரைக் கொல்லக் கூடாது என்று தடுத்துள்ளார்கள் என்பது அவருக்குத் தெரிந்துவிட்டது.

வரலாற்றில் வருகிறது. இதற்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமக்காக அமைக்கப்பட்டிருந் இடமான கூடாரத்திற்கு சென்று மீண்டும் துஆவில் மூழ்கிவிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் உடன் இருந்தார்கள். கூடாரத்தின் அக்கம்பக்கம் ஹஸ்ரத் ஸஃது பின் முஆஸ் (ரலி) அவர்களின் தலைமையில் அன்ஸார் ஸஹாபிகளின் ஒரு கூட்டம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பத்ர் நாளன்று ஒரு கூடாரத்தில் இருக்கும்போது இவ்வாறு கூறினார்கள்:

اَللّٰهُمَّ إِنِّيْ أَنْشُدُكَ عَهْدَكَ وَوَعْدَكَ
اَللّٰهُمَّ إِنْ شِئْتَ لَمْ تُعْبَدْ بَعْدَ الْيَوْمِ

அல்லாஹ்வே! நான் நீ அளித்த உறுதியை நீ வழங்கிய வாக்குறுதியை முன் வைத்துக் கூறுகின்றேன். என் இறைவா! நீயே முஸ்லிம்களின் அழிவை விரும்பினால் இன்றைக்குப் பிறகு உன்னை வணங்குபவர் எவரும் இருக்க மாட்டார்.

இதற்குள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருடைய கையைப் பிடித்துக் கொண்டார்கள். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! போதும் நிறுத்திக் கொள்ளுங்கள். தாங்கள் தங்கள் இறைவனிடம் மீண்டும், மீண்டும் துஆ கேட்டு விட்டீர்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கவசம் அணிந்திருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூடாரத்திலிருந்து வெளியே வந்து இதை ஓதிக் கொண்டிருந்தார்கள்:

سَيُهْزَمُ الْجَمْعُ وَيُوَلُّوْنَ الدُّبُرَ۔ بَلِ
السَّاعَةُ مَوْعِدُهُمْ وَالسَّاعَةُ اَدْهٰى وَاَمَرُّ

அண்மையில் இவர்கள் அனைவரும் தோல்வியடைவார்கள். மேலும், புறமுதுகிட்டு ஓடுவார்கள். இந்த நேரத்தைக் குறித்து தான் அச்சுறுத்தப்பட்டார்கள். இந்த நேரம் மிகவும் கடினமானதும், மிகவும் கசப்பானதும் ஆகும். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள்: பத்ர் நாளன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இணை வைப்பாளர்களைப் பாதுகாத்தார்கள். அவர்கள் ஆயிரம் பேர்

இருந்தனர். அன்னாரின் ஸஹாபிகள் 319 பேர் இருந்தனர்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கிப்லா பக்கம் முகம் திருப்பினார்கள். பிறகு, தம்முடைய இரு கைகளையும் ஏந்தினார்கள். தம் இறைவனை உரத்த குரலில் இவ்வாறு அழைத்துக் கொண்டே இருந்தார்கள்:

اَللّٰهُمَّ اَنْجِزْ لِيْ مَا وَعَدْتَّنِيْ۔ اَللّٰهُمَّ اٰتِ مَا وَعَدْتَّنِيْ

۔ اَللّٰهُمَّ اِنْ تُهْلِكْ هٰذِهِ الْعِصَابَةَ مِنْ اَهْلِ

الْاِسْلَامِ لَا تُعْبَدُ فِي الْاَرْضِ

அதாவது, அல்லாஹ்வே! நீ எனக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவாயாக! அல்லாஹ்வே! நீ எனக்கு வாக்களித்தவற்றை எனக்கு வழங்குவாயாக! அல்லாஹ்வே! நீ முஸ்லிம்களின் இந்தக் கூட்டத்தை அழித்து விட்டால், பூமியில் உன்னை எவரும் வணங்க மாட்டார்.

கிப்லாவின் பக்கம் முகம் திருப்பினார்கள். இரு கைகளையும் ஏந்தினார்கள். அன்னார் தம் இறைவனை உரத்த குரலில் அழைத்துக் கொண்டே இருந்தார்கள். எதுவரை என்றால், அன்னாருடைய போர்வை அன்னாருடைய தோளிலிருந்து விழுந்து விட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருக்கு அருகில் வந்தார்கள். அன்னாரது போர்வையை எடுத்தார்கள். அன்னாருடைய தோளில் போர்த்தி விட்டார்கள். பிறகு, அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்னால் இருந்து கட்டியணைத்துக் கொண்டார்கள்.

பின்னர், அல்லாஹ்வின் நபியே! தாங்கள் தங்கள் இறைவனுக்கு முன்னால் அழுது மன்றாடி செய்யும் துஆ தங்களுக்குப் போதுமானதாகும். அவன் தங்களிடம் அளித்துள்ள வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்றுவான் என்று கூறினார்கள். அப்போது அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்:

اِذْ تَسْتَغِيْثُوْنَ رَبَّكُمْ فَاسْتَجَابَ لَكُمْ اَنِّيْ

مُمِدُّكُمْ بِاَلْفٍ مِّنَ الْمَلٰٓئِكَةِ مُرْدِفِيْنَ

பொருள்: நீர் உம் இறைவனிடம் மன்றாடிக் கொண்டிருந்தபோது நிச்சயமாக நான் அணி அணியாக ஆயிரம் வானவர்களைக் கொண்டு உமக்கு உதவி புரிவேன் என்ற வாக்குறுதியுடன் அவன் உமது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டான்.(8:10)

ஆக, அல்லாஹ் வானவர்கள் மூலமாக அன்னாருக்கு உதவி புரிந்தான்.

இது ஸஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பாகும்.

இந்த சம்பவத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் தமது நூலில் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:

ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூடாரத்திற்குச் சென்று மீண்டும் துஆவில் மூழ்கி விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் உடன் இருந்தார்கள். கூடாரத்தைச் சுற்றி ஹஸ்ரத் ஸஃது பின் முஆஸ் (ரலி) அவர்களின் தலைமையில் அன்ஸார் ஸஹாபிகளின் ஒரு கூட்டம் காவலுக்கு நியமிக்கப்பட்டிருந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு மைதானத்தில் இருந்து ஓர் ஓசை எழுந்தது. குறைஷியர்களின் படை பொதுத் தாக்குதலைத் தொடுத்து விட்டது தெரியவந்தது.

அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிகவும் உருக்கமான நிலையில் இறைவனுக்கு முன் கைகளை ஏந்தி துஆ செய்து கொண்டிருந்தார்கள். மிகவும் அழுது மன்றாடும் நிலையில் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள்:

اَللّٰهُمَّ اِنِّيْ اَنْشُدُكَ عَهْدَكَ وَ وَعْدَكَ

اَللّٰهُمَّ اِنْ تُهْلِكْ هٰذِهِ الْعِصَابَةَ

مِنْ اَهْلِ الْاِسْلَامِ

என் இறைவா! உன்னுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவாயாக! என் எஜமானனே! முஸ்லிம்களின் இந்தக் கூட்டம் இன்று இந்தக் களத்தில் அழிந்து விட்டால், உலகில் உன்னை வணங்குபவர் எவரும் இருக்க மாட்டார்.

மேலும், அந்த நேரத்தில் அன்னார் எந்த அளவு அழுது மன்றாடும் நிலையில் இருந்தார்கள் என்றால் சிலவேளை அன்னார் ஸஜ்தாவில் விழுந்து வந்தார்கள். சிலவேளை நின்று கொண்டு இறைவனை அழைத்துக் கொண்டிருந்தார்கள். அன்னாருடைய போர்வை அன்னாருடைய தோளிலிருந்து விழுந்து வந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதை எடுத்து எடுத்து அன்னார் (ஸல்) மீது போர்த்தி வந்தார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் போர் புரிந்து கொண்டிருக்கும்போது எனக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பற்றிய சிந்தனை வரும். அப்போது நான் அன்னார் இருந்த கூடாரம் பக்கம் ஓடிச் செல்வேன். ஆனால், நான் எப்போது சென்றாலும் நான் அன்னார் ஸஜ்தாவில் அழுது மன்றாடிக் கொண்டிருப்பதைக் கண்டேன். மேலும், அன்னாருடைய நாவில் இந்த சொற்கள் ஓடிக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன்:

يَا حَيُّ يَاقَيُّوْمُ يَا حَيُّ يَاقَيُّوْمُ

உயிருள்ள என் இறைவா! எனக்கு வாழ்வளித்த என் எஜமானனே!

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருடைய இந்த நிலையைக் கண்டு நிம்மதியிழந்து வந்தார்கள். சிலவேளை தம்மையும் அறியாமல் பணிவுடன் இவ்வாறு கூறிவந்தார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என் தாய் தந்தையர் தங்கள் மீது அர்ப்பணமாகட்டும்! தாங்கள் பதற்றம் அடையாதீர்கள். அல்லாஹ் தன் வாக்குறுதிகளை நிச்சயமாக நிறைவேற்றுவான். அல்லாஹ் தன வாக்குறுதிகளை நிச்சயமாக நிறைவேற்றுவான்.

ஹர்கெ ஆரிஃப்தார் அஸ்த் , தர்ஸான் தர்

இது ஒரு பாரசீக முதுமொழியாகும்:

பொருள்: எவர் எந்த அளவு இறைஞானம் கொண்டிருக்கிறாரோ அந்த அளவே அவர் (இறை) அச்சமும் கொள்வார் என்ற இந்த முதுமொழிக்கு ஏற்ப ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொடர்ச்சியாக துஆ மற்றும் அழுது மன்றாடுவதில் ஈடுபட்டிருந்தார்கள்.

தவக்குல் என்றால் என்ன? என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள்: அன்னார் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பத்ர் களத்தில் ஸஹாபிகளின் ஒரு வரிசையை அமைத்தார்கள். அவர்களைத் தத்தமது இடத்தில் நிற்க வைத்தார்கள். எப்படி போரிட வேண்டும்? என்று அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். அதற்குப் பிறகு ஓர் உயரமான இடத்தில் அமர்ந்து துஆக்கள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஸஹாபிகளை மதீனாவில் விட்டுவிட்டார்கள்; அன்னார் தாம் தனியாக அந்த இடத்தில் அமர்ந்து துஆ செய்தார்கள் என்று இருக்கவில்லை. மாறாக, முதலில் ஸஹாபிகளை அழைத்துக் கொண்டு போர்க் களத்தை அடைந்தார்கள். பின்னர், அவர்களை வரிசை படுத்தினார்கள். அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். அதன் பிறகு, உயரமான இடத்தில் அமர்ந்து கொண்டார்கள். மேலும், துஆக்கள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

இதுதான் தவக்குல் (இறைவன் மீதான நம்பிக்கை) ஆகும். இதைத் தான் நாமும் மேற்கொள்ள வேண்டும். அதாவது, காரணிகளையும் பயன்படுத்த வேண்டும். மனிதன் தன் முயற்சியால் செய்ய முடிந்தவற்றை செய்ய வேண்டும். பிறகு, துஆக்களில் ஈடுபட்டு விட வேண்டும். இது தவக்குல் (இறை நம்பிக்கை) எனப்படுகிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

திருக்குர்ஆனில் மீண்டும், மீண்டும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு, நிராகரிப்பாளர்களை வெற்றி பெறுவதற்கான வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், இஸ்லாத்தின் முதல் போராக இருந்த பத்ர் யுத்தம் ஆரம்பம் ஆனபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மன்றாடி, துஆ செய்ய ஆரம்பித்து விட்டார்கள். துஆ செய்தபோது இந்தச் சொற்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நாவில் இருந்து வந்தன:

اَللّٰهُمَّ اِنْ اَهْلَكْتَ هٰذِهِ الْعِصَابَةَ

فَلَنْ تُعْبَدَ فِي الْاَرْضِ أَبَدًا

அதாவது, என் இறைவா! இன்று நீ! இந்த ஜமாஅத்தை அழித்துவிட்டால், அவர்கள் வெறும் 313 பேர் இருந்தார்கள். பின்னர் கியாமத் வரை எவரும் உன்னை வணங்க மாட்டார்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நாவிலிருந்து இந்தச் சொற்களைக் கேட்டதும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் ஏன் இந்த அளவு அமைதி இழந்து இருக்கிறீர்கள்? நான் வெற்றியை வழங்குவேன் என்று இறைவனோ தங்களுக்கு உறுதியான வாக்குறுதி அளித்துள்ளானே! என்று பணிவுடன் கேட்டார்கள்.

அதற்கு ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இது உண்மைதான். எனினும், அவன் தேவையற்றவன் என்பதன் மீது என் பார்வை இருக்கிறது. அதாவது, எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றுவது இறைவன் மீது கட்டாய கடமை ஒன்றும் இல்லை. அல்லாஹ் முற்றிலும் தேவையற்றவன் ஆவான். எனவே, நாம் ஒவ்வொரு முறையும் எல்லா நேரமும் அஞ்சிக் கொண்டே இருக்க வேண்டும். கவலைப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூடாரத்தில் துஆ செய்து கொண்டிருந்த போது, ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கு சிற்றுறக்கம் ஏற்பட்டது. பிறகு, தீடிரென விழித்துக் கொண்டார்கள். மேலும், கூறினார்கள்: அபூபக்ரே! மகிழ்ச்சி அடையுங்கள். உம் இறைவனின் உதவி வந்து விட்டது. இதோ பாரும்! ஜிப்ரீல் தமது குதிரையின் கடிவாளத்தைப் பிடித்தவாறு அதை ஓட்டிக் கொண்டு வருகிறார்கள். அதன் கால்களில் புழுதியின் அடையாளங்கள் உள்ளன.

இது ஸீரத் ஹிஷ்ஷாமின் அறிவிப்பு ஆகும்.

பிறகு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அபூபக்ரே! உமக்கு நற்செய்தி! ஜிப்ரீல் வருகிறார்கள். அவர்கள் மஞ்சள் நிற தலைப்பாகையை அணிந்துள்ளார்கள். அவர்கள் விண்ணுக்கும், மண்ணுக்கும் இடையில் தம்முடைய குதிரைகளின் கடிவாளங்களைப் பிடித்துள்ளார்கள். அவர்கள் பூமியில் இறங்கியதும், சிறிது நேரத்திற்கு என் முன்னால் இருந்து மறைந்து விட்டார்கள். மீண்டும் தோன்றினார்கள். அவர்களுடைய குதிரைகளின் கால்களில் புழுதி படிந்திருந்தன. அவர்கள் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள்: தாங்கள் துஆ கேட்டதும் அல்லாஹ்வின் உதவி தங்களிடம் வந்து விட்டது.

பத்ர் யுத்தத்தில், போரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பங்களிப்பு பற்றி தனிப்பட்ட பங்களிப்பு பற்றி இவ்வாறு

எழுதப்பட்டுள்ளது: பத்ர் மைதானத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்களை வலதுபுறப் படைக்குத் தலைவராக நியமித்தார்கள். ஹஸ்ரத் மிக்தாத் பின் அம்ர் (ரலி) அவர்களை இடதுபுறப் படைக்குத் தலைவராக நியமித்தார்கள். ஹஸ்ரத் கைஸ் பின் அபீ ஸஃஸாலாஃவை காலாற்படைக்குத் தலைவராக நியமித்தார்கள். படையின் பொதுவான தலைமை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கையில் இருந்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் வரிசையில் இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸஹாபிகள் அனைவரையும் தம்முடைய வழிகாட்டல்களைப் பேணி நடக்கச் செய்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் எவரும் நான் அவருக்கு முன்னால் இல்லாத வரை முன்னோக்கிச் செல்லக் கூடாது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆயுதங்களை நோக்கத்துடன் பயன்படுத்துவதை வலியுறுத்தியவாறு கூறினார்கள்: எதிரி உங்களுக்கு அருகில் வந்துவிட்ட பிறகு அம்பு எய்துங்கள். இயன்ற அளவு அம்புகளை பாதுகாத்து வைத்துக் கொள்ளுங்கள்.

அமர்ந்து துஆ செய்வது பற்றி கூறப்பட்ட இந்த சம்பவம் அனைத்தும் இந்த முழுப் போர் ஆரம்பம் ஆகுவதற்கு முன்னுள்ள சம்பவம் ஆகும். ஏனெனில், அது எழுதப்பட்டுள்ள வகையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் போரில் கலந்து கொள்ளவில்லை போல என்று புரியப்படுகிறது. அன்னார் கலந்து கொண்டிருந்தார்கள். ஆனால், இந்த துஆவை அன்னார் அதற்கு முன்னர் செய்தார்கள். அதன் விளைவாக அல்லாஹ் வானவர்களின் உதவியையும் அனுப்பினான்.

எவ்வாறு இருப்பினும், இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: பத்ரின் போர்க் களத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் செயல் ரீதியான பங்களிப்பு பற்றி ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்: நாங்கள் பத்ர் நாளன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் இருந்து வந்தோம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எதிரிக்கு மிக அருகில் இருந்தார்கள். அந்த நாளில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எல்லாப் போராளிகளிலும் அதிகம் கடுமையாகப் போர் புரிபவர்களாக இருந்தார்கள்.

போர்க் களத்தில் குறைஷிய படையின் வருகை மற்றும் அவர்களிடம் பரஸ்பரம் ஏற்பட்ட கருத்து வேறுபாடு ஆகியவற்றைப் பற்றி எழுதப்பட்டுள்ளது:

குறைஷிகள் பத்ர் களத்தில் இறங்கியதும், உமைர் பின் வஹபை முஹம்மது (ஸல்) அவர்களுடன் எத்தனை போர் வீரர்கள் இருக்கிறார்கள் என்று போய் பார்! என அனுப்பி வைத்தனர். எனவே உமைர் தனது குதிரையை இஸ்லாமிய படையைச் சுற்றி ஓட்டினான். பிறகு, மக்கத்து குறைஷிகளிடம் வந்து என்னைப் பொருத்தவரை இவர்கள் முந்நூற்றுக்கு சற்று குறைவாகவோ அதிகமாகவோ இருப்பார்கள் என்று கூறினான். பின்னர் இஸ்லாமிய படைக்கு உதவி புரிவதற்காக மறைவாக இருந்து தாக்கும் பதுங்குமிடம் ஏதும் இல்லையே என்பதை அறிய மீண்டும் பார்த்து வருவதற்காக திரும்பிச் சென்றான். உமைர் பின் வஹப் தனது குதிரையை ஓட்டி மிகவும் தூரம் சென்று விட்டான். அங்கிருந்து திரும்பி வந்து கூறினான்:

அவர்களுக்கு உதவி இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், குறைஷிகளே! துன்பங்கள் மரணத்தைத் தூக்கிக் கொண்டு உங்கள் மீது இறங்குவதை நான் பார்த்தேன். நான் மரணங்களை சுமந்திருக்கும் ஒட்டகங்களைப் பார்த்தேன். யஸ்ரபின் ஒட்டகங்கள் உறுதியான மரணத்தை சுமந்துள்ளன. அவர்கள் தற்காப்புக்கான எந்த ஏற்பாடும் இல்லாத சமுதாயம் ஆவார்கள். அவர்களிடம் வாளைத் தவிர அடைக்கலத்திற்கான வேறு எந்த இடமும் இல்லை. நம்மில் ஒவ்வொருவரையும் கொல்லும் வரை அவர்களில் ஒருவர் கூட கொல்லப்பட மாட்டார். அவர்கள் தமது கணக்குப்படி நம்முடைய மனிதர்களைக் கொன்று போட்டால் அதற்குப் பிறகு வாழ்வில் என்ன இன்பம் இருக்கும்? இப்போது நீங்கள் பொருத்தமாகக் கருதுவதை செய்யுங்கள்!

முழு ஆய்வு செய்து அவன் தனது ஒரு கருத்தைக் கூறினான்.

இந்த விஷயங்களைக் கேட்ட ஹக்கீம் பின் ஹிஷ்ஷாம் உத்பா பின் ரபீஆவிடம் வந்தான். அவனிடம், நீ குறைஷியர்களில் குறிப்பிட்டவனும் தலைவனும் ஆவாய். எனவே மக்களைத் திருப்பி அழைத்துச் சென்று விடு. அம்ர் பின் ஹஸ்ரமீயின் ஈட்டுத் தொகையை செலுத்தி விடு என்று கூறினான்.

அதற்கு, எனக்கு சம்மதம் தான். நீ இப்னு ஹன்ஸாவிடம் அதாவது அபூஜஹ்லிடம் செல் -அபூஜஹ்லின் தந்தை பெயர் ஹன்ஸா ஆகும். அவனிடம் செல்! என்று உத்பா கூறினான்.

எனவே ஹக்கீம் பின் ஹிஸ்ஸாம் இதற்காக அபூஜஹ்லிடம் சென்றான். அவனிடம், என்னை உங்களிடம் உத்பா அனுப்பினான். அவன் ஈட்டுத் தொகையை செலுத்தி விடுவானாம்; நீங்கள் குறைஷியர்களைத் திருப்பி அழைத்துச் செல்லுங்கள் என்று கூறினான். அதைக் கேட்ட அபூஜஹ்ல், முஹம்மது (ஸல்) அவர்களைப் பார்த்ததிலிருந்து அவன் பயந்து விட்டான். கோழைத்தனத்தை வெளிப்படுத்த ஆரம்பித்து விட்டான். ஒருபோதும் முடியாது. இறைவன் மீது ஆணையாக! இறைவன் எங்களுக்கும் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் இடையில் தீர்ப்பு வழங்கும் வரை நாங்கள் திரும்பிச் செல்ல மாட்டோம் என்று கூறினான்.

அபூஜஹ்ல் இதையும் கூறினான்: உத்பா ஏன் நம்மை போரிலிருந்து தடுக்கின்றான் என்றால், முஸ்லிம்கள் எங்களுக்கு ஒட்டகத்தின் ஒரு கவளத்தைப் போன்றுதான் என்பது அவனுக்குத் தெரியும் - அதாவது மிகவும் எளிதாக நாங்கள் அவர்களைக் கொன்றுவிடுவோம் - மேலும், அந்த முஸ்லிம்களில் உத்பாவின் மகனும் இருக்கின்றார்.

உத்பாவின் மகன் முஸ்லிம் ஆகியிருந்தார். ஒருவேளை அவன் தன் மகனின் காரணமாக போர் புரிய விரும்பவில்லை. உத்பாவின் இந்த மகன் ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னார் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து பத்ர் யுத்த களத்தில் இருந்தார்கள். உத்பாவுக்கு அபூஜஹ்ல் தரப்பிலிருந்து கோழைத்தனம் என்று பரிகாசம் செய்த செய்தி கிடைத்ததும், அவன் யார் கோழை? யார் பயந்து போய் இருக்கிறார்? என்பது அந்தக் கோழைக்கு அதாவது, அபூஜஹ்லுக்கு விரைவில் தெரிந்து விடும் என்று கூறினான்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் இதன் விளக்கத்தை எடுத்துரைத்துள்ளார்கள். அதை எடுத்துரைத்தவாறு அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

அப்போது படைகள் சரியாக ஒன்று மற்றொன்றுக்கு எதிரில் இருந்தன - முதலில் போர் நிலையில், படைகள் ஒன்றுகூடிக் கொண்டிருந்தன. அந்த நேரத்தில் காஃபிர்களின் படை பெரும் படையாக இருந்தது. அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் துஆக்களில் ஈடுபட்டிருந்தார்கள். படைகள் எதிரெதிரே வந்த பிறகு போர் ஆரம்பிக்கலானதும் அந்த நேரத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் போர்க்களத்தில் இருந்தார்கள்.

(மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப்) கூறுகின்றார்கள்: இப்போது படைகள் சரியாக ஒன்று மற்றொன்றுக்கு எதிரே இருந்தன. ஆனால், இறை வல்லமையின் வினோதமான காட்சி என்னவென்றால், அப்போது படைகள் நிற்கும் வரிசை எப்படி இருந்ததென்றால், இஸ்லாமிய படை குறைஷியர்களுக்கு அசல் எண்ணிக்கையை விட அதிகமாக இன்னும் சொல்வதாயின் இரட்டிப்பாகத் தென்பட்டது.

அதன் காரணமாக, நிராகரிப்பாளர்கள் மதிப்பச்சத்திற்குள்ளாகிக் கொண்டே சென்றார்கள். மறுபுறம் குறைஷிகளின் படை முஸ்லிம்களுக்கு அவர்களின் அசல் எண்ணிக்கையை விடக் குறைவாகத் தென்பட்டது. அதன் விளைவாக முஸ்லிம்களின் உள்ளங்கள் விரிவடைந்தன. எப்படியாவது, இஸ்லாமிய படையின் எண்ணிக்கையை சரியாக அனுமானித்து விட வேண்டும் அல்லது தெரிந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் உடைந்த தங்கள் உள்ளங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பது குறைஷிகளின் முயற்சியாக இருந்தது. பயந்துபோயிருந்த உள்ளங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று நினைத்தார்கள். இதற்காக குறைஷிய தலைவர்கள் உமைர் பின் வஹபை இஸ்லாமிய படையின் நாலாப்புறமும் குதிரை ஓட்டி அதன் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களுக்குப் பின்னால் உதவிப் படை ஏதும் மறைவாக இல்லையே என்பதைப் பார்த்து வர அனுப்பினார்கள்.

எனவே உமைர் குதிரையில் பயணித்து முஸ்லிம்களை சுற்றி வந்தான். ஆனால், அவனுக்கு முஸ்லிம்களின் தோற்றம் மற்றும் வடிவத்தால் எத்தகைய கம்பீரமும் மன உறுதியும் மரணத்தைப் பற்றிய எப்படிப்பட்ட அச்சமின்மையும் தென்பட்டது என்றால் அவன் மிகவும் மதிப்பச்சத்திற்குள்ளாகி திரும்பினான். மேலும், குறைஷிகளைப் பார்த்துக் கூறினான்:

எனக்கு மறைவான உதவிப் படையோ ஏதும் தென்படவில்லை. ஆனால், குறைஷிய கூட்டமே! முஸ்லிம்களின் படையில் ஒட்டகங்களின் பல்லக்குகள் தம் மீது மனிதர்களை அல்ல ; மாறாக, மரணங்களைத் தூக்கியிருப்பதைக் கண்டேன். யஸ்ரபின் ஒட்டகங்கள் மீது அழிவுகள் பயணித்து வருவதைப் போன்று உள்ளது. குறைஷிகள் இந்த விஷயத்தைக் கேட்டதும் அவர்களிடம் ஒரு மன உளைச்சல் போன்ற நிலை உருவாகி விட்டது. அவர்களுக்கு உத்தரவாதம் அளிப்பவனாக இருந்து, அங்கு வந்திருந்த ஸுராக்கா எந்த அளவு மதிப்பச்சத்திற்கு உள்ளானான் என்றால் அவன் திரும்பி ஓடி விட்டான். மக்கள் அவனைத் தடுத்தபோது எனக்குத் தெரிவதை நீங்கள் பார்ப்பதில்லை என்று கூறினான்.

ஹக்கீம் பின் ஹிஸ்ஸாம் உமைரின் கருத்தைக் கேட்டதும் பதற்றமடைந்து உத்பா பின் ரபீஆவிடம் வந்து, உத்பாவே! நீ முஹம்மது (ஸல்) அவர்களிடம் அம்ர் ஹஸ்ரமிக்காகத் தானே பழிவாங்க விரும்புகிறாய். அவன் உன் நண்பனாக இருந்தான். நீ அவன் தரப்பிலிருந்து ஈட்டுத் தொகையை செலுத்தி விட்டு குறைஷிகளை அழைத்துக் கொண்டு திரும்பிச் சென்று விட முடியுமா? அதில் என்றென்றைக்கும் உனது நற்பெயர் இருக்கும் என்று கூறினான். சுயமே

பதறிப் போய் இருந்த உத்பாவுக்கு வேறு என்ன வேண்டும்! அவன் உடனடியாக, ஆமாம்!ஆமாம்! இது சரிதான் எனக்கு சம்மதம் என்று கூறினான். பிறகு, அவன் ஹக்கீம் பின் ஹிஸ்ஸாமைப் பார்த்து கடைசியில் இந்த முஸ்லிம்களும் நாமும் உறவினர்கள் தானே. சகோதரன் சகோதரன் மீது வாள் ஏந்துவதும் தந்தை மகன் மீது வாள் ஏந்துவதும் நன்றாகவா இருக்கிறது? நீ ஒன்று செய். இப்போது அபுல்ஹகமிடம் , அதாவது அபூஜஹ்லிடம் செல். அவனுக்கு முன்னால் இந்த ஆலோசனையை எடுத்து வை! என்று கூறினான்.

மறுபுறம் உத்பா தானே ஒட்டகத்தின் மீது பயணித்து தன் சார்பாக மக்களுக்கு இவ்வாறு புரிய வைக்க ஆரம்பித்து விட்டான்; உறவினர்கள் மத்தியில் போர் புரிவது சரியில்லை. நாம் திரும்பிச் சென்று விட வேண்டும். முஹம்மது (ஸல்) அவர்களை அவருடைய நிலையிலேயே விட்டு விட வேண்டும். அவர் மற்ற அரேபிய கோத்திரங்களுடன் (ஒரு) முடிவுக்கு வரட்டும். என்ன விளைவு ஏற்படுகிறதோ! பார்க்கலாம். அடுத்து நீங்கள் பாருங்கள். அந்த முஸ்லிம்களுடன் சண்டையிடுவதும் சாதாரணப் பணி ஒன்றும் அல்ல. ஏனெனில், நீங்கள் என்னைக் கோழை என்று சொன்னாலும் பரவாயில்லை. ஆனால் நான் கோழையல்ல. எனக்கோ இந்த மக்கள் மரணத்தை வாங்கியவர்களாகத் தெரிகிறார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தூரத்திலிருந்து உத்பாவைப் பார்த்ததும் கூறினார்கள்: குறைஷிகளின் படையில் யாரிடமாவது ஒழுக்கம் இருக்கிறது என்றால், இந்த செந்நிற ஒட்டகத்தில் பயணித்தவர்களிடம் கண்டிப்பாக இருக்கிறது. இந்த மக்கள் அவன் கூறுவதைக் கேட்டால் அவர்களுக்கு நல்லதாகும்.

ஆனால், ஹக்கீம் பின் ஹிஸ்ஸாம் அபூஜஹ்லிடம் வந்து அவனிடம் இந்த ஆலோசனையைக் கூறியபோது, சமுதாயத்தின் அந்த ஃபிர்அவ்ன் எப்படி இதுபோன்ற விஷயங்களை கேட்பான்? உடனடியாக ஓஹோ! இப்போது உத்பாவுக்கு தன் முன் தன் உறவினர்கள் தென்பட ஆரம்பித்து விட்டார்களா? என்று கேட்டான். பிறகு அவன் அம்ர் ஹஸ்ரமீயின் சகோதரன் ஆமிர் ஹஸ்ரமீயை அழைத்து உன் நண்பன் உத்பா என்ன சொல்கிறான் என்று நீ கேட்டாயா? அதுவும் உன் சகோதரனுக்காக பழிவாங்கும் சந்தர்ப்பம் கையில் கிடைத்திருக்கும் போது (என்ன கூறுகின்றான் பார்!) என்று கூறினான்.

ஆமிரின் கண்களில் இரத்தம் வந்தது. அவன் அரேபியாவின் தொன்மையான வழக்கப்படி ஆடையை கிழித்துக் கொண்டு நிர்வாணமாகி இவ்வாறு கூச்சலிட ஆரம்பித்தான்:

அருமை அம்ரு! அருமை! அந்தோ ! என் சகோதரனுக்காக பழிவாங்கப்படாமலேயே இருக்கப் போகிறது. அந்தோ! என் சகோதரனுக்காக பழிவாங்கப்படாமலேயே இருக்கப் போகிறது. இந்தப் பாலைவனக் குரல் குறைஷிகளின் நெஞ்சங்களில் பகைமைத் தீயை அதிகரிக்கச் செய்துவிட்டது. போர் அடுப்பு தனது முழு ஆற்றலுடன் கொழுந்து விட்டெறிய ஆரம்பித்தது.

பிறகு, அதையடுத்து போர் ஆரம்பம் ஆனது. அதன் மற்ற விவரங்கள் இனி எடுத்துரைக்கப்படும். இன்ஷாஅல்லாஹ்.

தமிழாக்கம்:
மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

* * * * *

**குத்பா பேருரை.. (12ம் பக்கத் தொடர்ச்சி....)**

இணை வைப்பாளர்களின் சடலங்களை அவர்கள் கொலையுண்ட இடத்தில் இருந்து தூக்கிச் செல்லுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வழிகாட்டல் வழங்கினார்கள். அன்னார் (ஸல்) போர் துவங்குவதற்கு முன்னரே அந்த நபர்கள் கொல்லப்பட இருந்த இடத்தைப் பற்றி தகவல் கூறியிருந்தார்கள்.

ஆக, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பத்ர் போரில் இணை வைப்பாளர்கள் கொல்லப்பட இருந்த இடத்தை முன்னரே எங்களுக்கு காட்டித் தந்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரிகள் கொலை செய்யப்பட இருக்கும் இடத்தை எங்களுக்கு காட்டியவாறு, இது நாளை இன்ஷா அல்லாஹ் உத்பா பின் ரபீஆ கொலை செய்யப்பட இருக்கும் இடமாக இருக்கும்.: இது ஷேபா பின் ரபீஆ கொலை செய்யப்பட இருக்கும் இடமாக இருக்கும்; இது உமைய்யா பின் கலஃப் கொலை செய்யப்பட இருக்கும் இடமாக இருக்கும்; இது அபூஜஹ்ல் பின் ஹிஷ்ஷாம் கொலை செய்யப்பட இருக்கும் இடமாக இருக்கும் மேலும், இது இன்னார் கொலை செய்யப்பட்ட இருக்கும் இடமாகும் என்று கூறிக் கொண்டு சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய கரத்தை நிலத்தின் மீது வைத்து அடையாளமிட்டுக் கொண்டு சென்றார்கள்.

மேலும் அடுத்த நாள் பத்ர் போர் நாளன்று, எந்த நபர்கள் கொலையுண்டார்களோ அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அருளுக்குரிய கரத்தை எங்கெங்கெல்லாம் வைத்திருந்தார்களோ அந்த இடத்திலிருந்து சிறிதும் அங்கும், இங்கும் விலகி இருக்கவில்லை.

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 245, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 2002-ம் ஆண்டு)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நிராகரிப்பாளர்களில் கொல்லப்பட்ட அனைவரையும் குழிகளில் வீசி விடுங்கள் என்று போருக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆக, உமைய்யா பின் கலஃபைத் தவிர மற்ற அனைவரும் வீசப்பட்டு விட்டனர்.அவனது உடல் அவனது போர் கவசத்தில் ஊதியிருந்தது. அதனை தூக்க விரும்பியபோது அவனது சதை கீழே விழத் தொடங்கியது. அதன் காரணமாக அவன் அந்த இடத்திலேயே மண்ணையும், கல்லையும் போட்டு புதைக்கப்பட்டுவிட்டான்.

( ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம், பக்கம் 435, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் - 2001-ம் ஆண்டு)

இணை வைப்பாளர்களின் சடலங்களை குழிகளில் வீசி விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளை வழங்கியபோது, உத்பா பின் ரபீஆ (உடல்) தூக்கப்பட்டது. மேலும் (அது) குழியில் வீசப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உத்பாவின் மகனான ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா (ரலி) அவர்களின் முகத்தில் விருப்பமின்மையின் அடையாளங்களை பார்த்து விட்டார்கள்.

அன்னார் (ரலி) முஸ்லிமாக ஆகியிருந்தார்கள். (அவரது) தந்தையோ காஃபிராக இருந்தார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அபூ ஹுஸைஃபாவே! உமது உள்ளத்தில் உமது தந்தையைக் குறித்து சில எண்ணங்கள் தோன்றிவிட்டன போலும்! அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு எனது தந்தையைக் குறித்தும் கவலை இல்லை; அவர் கொலை செய்யப்பட்டது குறித்தும் ஐயம் கொள்ளவில்லை. நானோ எனது தந்தையை சிந்தனை மிக்கவர் என்றும், மென்மையான உள்ளம் படைத்தவர் மற்றும் கண்ணியத்திற்குரிய மனிதர் என்றும் கருதியிருந்தேன். எனவே நான் அன்னாரிடத்தில் கண்டிருந்த இந்த விஷயங்கள் அவரை இஸ்லாத்தின் பக்கம் கொண்டு வந்துவிடும் என்று நான் நம்பிக்கை கொண்டிருந்தேன். எனினும், அவரின் இந்த முடிவைக் கண்ட போது எனக்கு அவரின் நிராகரிப்பு நினைவிற்கு வந்துவிட்டது. எனக்கோ அவர் இஸ்லாத்தை தழுவி விடுவார் என்ற நம்பிக்கை இருந்தது. இந்த விஷயம் தான் என்னை துன்பத்திற்கு ஆளாக்கிவிட்டது என்று ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரின் அதாவது அபூஹுஸைஃபா அவர்களுடைய நன்மைக்காக துஆ செய்தார்கள். மேலும், வாழ்த்துகளை கூறினார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத், தொகுதி 4, பக்கம் 56- 57, தாருல் குதுபில் இல்மியா, 1993-ம் ஆண்டு)

ஹஸ்ரத் அபூ தல்ஹா அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போர் நாளன்று குறைஷிய தலைவர்களில் 24 நபர்கள் தொடர்பாக கட்டளை வழங்கினார்கள். மேலும், பத்ருடைய கிணறுகளில் ஒரு கிணற்றில் அவர்கள் வீசப்பட்டு விட்டார்கள். மேலும், அன்னார் (ஸல்) ஒரு சமுதாயத்தினை வெற்றிக் கொண்டால், போர் மைதானத்தில் மூன்று இரவுகளை கழிப்பார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் மைதானத்தில் தங்கியிருந்தபோது மூன்றாம் நாள் ஆனது. அப்போது அன்னார் (ஸல்) தமது ஒட்டகத்தை பூட்டும்படி கட்டளை வழங்கினார்கள். எனவே, (பயணத்திற்கு புறப்படுவதற்காக) ஒட்டகம் பூட்டப்பட்டது. பின்னர் அன்னார் (ஸல்) புறப்பட்டுச் சென்றார்கள். மேலும், அன்னாருடைய ஸஹாபிகளும் அன்னாருடன் சென்றார்கள்.

கூறுகின்றனர்: அன்னார் (ஸல்) ஏதோ ஒரு நோக்கத்திற்காக செல்கின்றார்கள் என்று நாங்கள் கருதினோம். எந்தக் கிணற்றில் அந்த நிராகரிப்பாளர்கள் புதைக்கப்படுவதற்காக வீசப்பட்டிருந்தார்களோ அந்தக் கிணற்றின் வாயிலை சென்றடைந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நின்றுவிட்டார்கள். மேலும், இன்ன இன்ன நபர்களின் மகன்களே !இன்ன இன்ன நபர்களின் மகன்களே ! இன்ன இன்ன நபர்களின் மகன்களே ! இப்போது உங்களுக்கு இந்த விஷயத்தால் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளதா? நீங்கள் அல்லாஹ்விற்கும், அவனது தூதருக்கும் கட்டுப்பட்டிருந்தால்! .

ஏனெனில், எங்களது இறைவன் எங்களுக்கு வழங்கிய வாக்குறுதியை உண்மையாகவே பெற்றுக் கொண்டு விட்டோம். உங்களது இறைவன் உங்களிடம் செய்திருந்த வாக்குறுதியை நீங்களும் உண்மையில் பெற்று விட்டீர்கள் அல்லவா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறந்து போன அந்த நிராகரிப்பாளர்களின் தந்தைமார்களின் பெயர்களை விளித்துக் கூறத் துவங்கினார்கள்.

தமிழாக்கம்
மவ்லவி: A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 17 August 2023 Issue No. 33

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஜுமுஆ பேருரை

## பத்ர் போரின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கையைப் பற்றிய நற்குறிப்புகள்

**குறைஷிய தலைவர்களுடைய சடலங்களின் அடக்கம் & ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்கள் &**

**போர் செல்வங்கள் பங்கிடப்பட்டதன் விவரங்கள் & ஈட்டுத் தொகை பெறப்பட்டு கைதிகள் விடுதலை செய்யப்பட்டது தொடர்பான குறிப்புகள்**

**மதிப்பிற்குரிய ரானா அப்துல் கான் ஸாஹிப், நாயிப் நாஸிம் மால் வக்ஃபே ஜதீத் பாகிஸ்தான் & மதிப்பிற்குரிய நுஸ்ரத் ஜஹான் அஹ்மத் ஸாஹிப் பாகிஸ்தான் ஆகியோரின் நற்குறிப்புகளும்& ஜனாஸா தொழுகையும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 2023-**ஜுலை 14 அதாவது ஹிஜ்ரீ ஷம்ஸி 1402 ஆண்டு வஃபா மாதம் 14-**ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

பத்ர் போரின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் சம்பவங்களைக் குறித்து கூறப்பட்டு வந்தது. பத்ர் போர் முடிவடைந்தது. மேலும், நிராகரிப்பாளர்கள் தங்களுக்கான தீய முடிவை அடைந்தனர். ஏற்கனவே கூறப்பட்டிருந்தது போன்று 70 நிராகரிப்பாளர்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் ஏராளமான தலைவர்களும் இருந்தனர். அந்த குறைஷிய தலைவர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டது தொடர்பாக இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது. ஸஹீஹ் புகாரியில் உள்ளது: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஅபாவிற்கு அருகில் தொழுது கொண்டிருந்தார்கள்.

அதாவது இது பழைய சம்பவம் ஆகும். முன்னர் என்ன நிலைமைகள் இருந்து வந்தன? என்று முந்தைய அனைத்து நிலைமைகளையும் எடுத்துக் கூறப்படுகின்றன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஅபாவிற்கு அருகில் தொழுது கொண்டிருந்தார்கள். அப்போது, குறைஷிகளைச் சார்ந்த சில நபர்கள் கூறியதனால் அவர்களில் மிகவும் துர்பாக்கியம் பெற்ற நபர் ஒருவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஜ்தாவில் இருந்த போது அன்னாரின் தோள்களின் நடுவில் விலங்கின் கருப்பையை வைத்து விட்டான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஜ்தாவின் நிலையிலேயே இருந்தார்கள். மேலும், அந்த மக்கள் சிரித்துக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு ஒருவர் தகவல் கூறினார். அன்னார் சிறிய வயதைக் கொண்ட சிறுமியாக இருந்தார்கள். ஓடோடி வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ ஸஜ்தாவின் நிலையில் இருந்தார்கள்.. எதுவரை என்றால், அன்னார் (ரலியல்லாஹு அன்ஹா) அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேலே இருந்து விலக்கி விட்டார்கள்.

அதாவது, அன்னாரின் மேலே வைக்கப்பட்டிருந்த அந்த கருப் பையை ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் அகற்றிவிட்டார்கள்.

ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் அந்த மக்களை ஏசி பேசினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுது முடித்த பிறகு, அல்லாஹ்வே! நீ குறைஷிகளை பிடிப்பாயாக! அல்லாஹ்வே! நீ குறைஷிகளை பிடிப்பாயாக! அல்லாஹ்வே! நீ குறைஷிகளை பிடிப்பாயாக! என்று அன்னார் (ஸல்) இவ்வாறு துஆ செய்தார்கள். பின்னர் அன்னார் (ஸல்), பெயர் எடுத்து துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! அம்ர் பின் ஹிஷ்ஷாம், உத்பா பின் ரபீஆ, ஷேபா பின் ரபீஆ, வலீத் பின் உத்பா, உமைய்யா பின் கலஃப், உக்பாப பின் அபீ முஈத் , அம்மாரா பின் வலீத் ஆகியோரை நீ பிடிப்பாயாக! என்று துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! இவர்கள் (அனைவரும்) பத்ர் போர் நாளன்று ( மண்ணில் வீழ்ந்து ) கிடந்ததை நான் பார்த்தேன்.

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நபர்களின் பெயர்களை குறிப்பிட்டிருந்தார்களோ அந்த நபர்களை அன்னார் (ரலி) கண்டார்கள்.


பின்னர், அவர்கள் பத்ர் மைதானத்தின் குழிகளுக்கு இழுத்துக் கொண்டு செல்லப்பட்டு வீசப்பட்டார்கள். பின்னர், குழியில் கிடப்பவர்கள் சாபத்தின் கீழ் இருக்கின்றனர் என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி, கிதாபுஸ் ஸலாத், பாபுஸ் ஸலாத், அறிவிப்பு எண்: 520)

இதேபோன்று ஸீரத் நூல்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

(இதன் தொடர்ச்சி.........11 ம் பக்கம் )

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad